


# அஸ்வெசும:
# நிவாரணமா அல்லது ஏமாற்றமா?

**இலங்கையின் சமூக பாதுகாப்பு திட்டங்களை வலுப்படுத்தல்:**
**விரிவான பகுப்பாய்வும் முன்னோக்கிச் செல்லும் வழிமுறையும்**

**ரைட் டு லைப் மனித உரிமைகள் நிலையம்**

# அசுவெசும:

# நிவாரணமா அல்லது ஏமாற்றமா?

இலங்கையின் சமூக பாதுகாப்பு திட்டங்களை வலுப்படுத்தல்:
விரிவான பகுப்பாய்வும் முன்னோக்கிச் செல்லும் வழிமுறையும்

RIGHT TO LIFE
HUMAN RIGHTS CENTRE

ரைட் டு லைப் மனித உரிமைகள் நிலையம்

2024 ஆகஸ்ட்

# அசுவெசும: நிவாரணமா அல்லது ஏமாற்றமா?

இலங்கையின் சமூக பாதுகாப்பு திட்டங்களை வலுப்படுத்தல்:
விரிவான பகுப்பாய்வும் முன்னோக்கிச் செல்லும் வழிமுறையும்

2024 ஆகஸ்ட்

ஆக்கம்
**அஜித் பெரகும்**

ஆய்வு உதவி
**சேத்தனா கோமிஸ்**

செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர்
**சமுது பஸ்நாயக்க**

மொழிபெயர்ப்பு
**Creative Content Consultants**

அச்சு
**adARTS - Maharagama**
011 3103181

# உள்ளடக்கம்


முன்னுரை 4

அறிமுகம் 5

அத்தியாயம் 1:
**சமூக நலன் கோட்பாட்டு அடிப்படைகள்** 9

அத்தியாயம் 2:
**இலங்கையில் சமூக நலன்களின் வரலாறு** 13

அத்தியாயம் 3:
**நிகழ்வு ஆய்வு - அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டம்** 16

அத்தியாயம் 4:
**சமூக பாதுகாப்புத் திட்டங்கள் தொடர்பாக, ரைட் டு லைப் மனித உரிமைகள் நிலையம் நடத்திய மதிப்பாய்வின் அறிமுகம்** 21

அத்தியாயம் 5:
**இலங்கையின் சமூக பாதுகாப்புத் திட்டங்களில் காணப்படும் சவால்கள்** 24

அத்தியாயம் 6:
**முன்னேற்றத்திற்கான மூலோபாயங்கள்** 32

அத்தியாயம் 7:
**கொள்கைப் பரிந்துரைகள்** 37

# முன்னுரை

கலாசார பாரம்பரியம் மற்றும் மீண்டெழும் தன்மை கொண்ட தேசமான இலங்கை, சமூக பாதுகாப்பு கட்டமைப்புகளின் முக்கியத்துவத்தை நீண்டகாலமாக அங்கீகரித்துள்ளது. இந்த பாதுகாப்பு கட்டமைப்புகள், நாட்டின் மிகவும் பாதிப்பை எதிர்கொள்ளக்கூடிய மக்களை ஆதரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. பல ஆண்டுகளாக வறுமையை ஒழிக்க பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிரான பாதுகாப்பு இடைத்தாங்கலையும் வழங்குகின்றன. இவ்வாறான முயற்சிகள் இருந்தபோதிலும், துல்லியமற்ற இலக்கு மற்றும் நிர்வாகத்தில் திறமையின்மை போன்ற சவால்கள் நீடித்தன. மேலும், சார்ந்திருக்கும் கலாச்சாரமும் உருவாகியுள்ளது. இந்த சிக்கல்களுக்கு ஒரு முக்கியமான ஆய்வு மற்றும் ஏற்கனவே உள்ள கட்டமைப்புகளை மறுசீரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

“இலங்கையின் சமூக பாதுகாப்பு கட்டமைப்புகளை வலுப்படுத்தல்: விரிவான பகுப்பாய்வும் முன்னோக்கிச் செல்லும் வழிமுறையும்” என்ற இந்த புத்தகமானது, இலங்கையில் சமூக நலன் தொடர்பான கலந்துரையாடலுக்கான காலத்திற்கேற்ற மற்றும் அத்தியாவசியமான விடயமாகும். இது சமூக நலன் மற்றும் இலங்கையின் சமூக பாதுகாப்பு கட்டமைப்புகளின் வரலாற்று வளர்ச்சியின் கோட்பாட்டு அடிப்படைகள் பற்றிய விரிவான ஆய்வுகளை வழங்குவதோடு, அஸ்வெசும நலன்புரிமை நன்மைகள் செயற்திட்டம் பற்றிய ஆழமான ஆய்வும் இதில் அடங்கும். தீவிரமான பகுப்பாய்வு மற்றும் விரிவான தரவுகள் மூலம், இந்த அறிக்கை இலங்கையின் சமூக பாதுகாப்பு செயற்திட்டங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களை அடையாளம் காட்டுவதோடு, அவற்றை மேம்படுத்துவதற்கான மூலோபாய பரிந்துரைகளையும் வழங்குகின்றது.

பயனாளிகளின் துல்லியமான இலக்கை நோக்கி பரிந்துபேசும் செயற்பாட்டை முன்னெடுப்பதும் பயனுள்ள வறுமை ஒழிப்பு திட்டங்களை செயற்படுத்துவதுமே, இந்த அறிக்கையின் முதன்மையான குறிக்கோளாகும். இதன் நோக்கம், தற்போது காணப்படும் சார்ந்திருக்கும் கலாச்சாரத்தை மாற்றுவதாகும். மனித உரிமைகளை நிலைநாட்டுவதிலும் சமூக நீதியை மேம்படுத்துவதிலும் சமூக பாதுகாப்பு கட்டமைப்புகளின் முக்கியத்துவத்தை இது வலியுறுத்துகிறது. இது ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகள் போன்ற சர்வதேச கட்டமைப்புகளுடன் ஒத்துப்போகிறது.

அடிப்படை ஆய்வுகள் மற்றும் இலக்குக் குழு கலந்துரையாடல்கள் உட்பட விரிவான ஆய்வின் அடிப்படையில், சமூக நலத் திட்டங்களின் செயற்திறன் மற்றும் தாக்கத்தை மேம்படுத்துவதற்கான நடைமுறை மூலோபாயங்களை இந்த அறிக்கை முன்வைக்கின்றது. தரவு சார்ந்த அணுகுமுறைகள், தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மற்றும் சமூக ஈடுபாட்டின் அவசியத்தை இது எடுத்துக்காட்டுகிறது. சமூக பாதுகாப்பு கட்டமைப்புகள், பயனுள்ளவை மற்றும் நியாயமானவை என்பதை உறுதிப்படுத்த இந்த கூறுகள் முக்கியமானவை.

இந்தப் புத்தகத்தில் காணப்படும் விடயங்களும் பரிந்துரைகளும் வெறும் கோட்பாட்டு ரீதியானவை அல்ல. அவை இலங்கை மக்களின் உண்மையான அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். பயனாளிகளிடமிருந்து வரும் விவரிப்புகளும் கருத்துகளும் சமூக நலத் திட்டங்களின் மனிதனுடன் தொடர்புடைய அம்சத்தை எடுத்துக்காட்டுகின்றன. மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களின் தேவைகளை திறம்பட நிவர்த்தி செய்யும் சீர்திருத்தங்களின் அவசரத் தேவையையும் அவை வலியுறுத்துகின்றன.

இலங்கை பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் சமூக சமத்துவத்தை நோக்கிச் செயற்படுவதால், கொள்கை வகுப்பாளர்கள், சமூக சேவையாளர்கள் மற்றும் சமூக நலனில் ஈடுபட்டுள்ள பங்குதாரர்களுக்கு இந்த அறிக்கை ஒரு முக்கியமான வழிகாட்டியாகும். வலுவான மற்றும் வெளிப்படையான சமூகப் பாதுகாப்பு கட்டமைப்புகளால் ஆதரிக்கப்படும், மிகவும் மீள்தன்மை கொண்ட மற்றும் தன்னிறைவு பெற்ற, மக்களுக்கான தெளிவான கண்ணோட்டத்தை இது வழங்குகின்றது.

இந்த முக்கியமான பிரச்சினை தொடர்பான முழுமையான ஆய்வில் ஈடுபட்டமை மற்றும் அர்ப்பணிப்புக்காக, நூலாசிரியர்களை நான் பாராட்டுகின்றேன். இலங்கையின் தற்போதைய சமூக நலன்புரி நிலையை எடுத்துக்காட்டுவது மட்டுமன்றி, அர்த்தமுள்ள மாற்றத்திற்கும் நிலையான அபிவிருத்திக்கும் அவர்களுடைய இந்த மகத்தான பணி வழிவகுக்கின்றது. இந்த அறிக்கை, இலங்கையின் சமூகப் பாதுகாப்பு கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கும் மற்றும் வழிகாட்டும் என நம்புவதோடு, இது நாட்டு மக்கள் அனைவருக்கும் மிகவும் நம்பிக்கைக்குரிய மற்றும் நியாயமான எதிர்காலத்திற்கு பங்களிக்கும் என நான் நம்புகின்றேன்.

**பிலிப் திஸாநாயக்க**
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
ரைட் டு லை.ஃப்,
மனித உரிமைகள் நிலையம்

# அறிமுகம்

### நோக்கமும் குறிக்கோள்களும்

பாதிப்பை எதிர்கொள்ளக்கூடிய மக்களுக்கு உதவுவதையும் பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிராக பாதுகாப்பை வழங்குவதையும் இலக்காகக் கொண்ட சமூக பாதுகாப்பு செயற்திட்டங்களின் நீண்ட வரலாற்றை இலங்கை கொண்டுள்ளது. இந்த அறிக்கையானது, இலங்கையின் சமூக பாதுகாப்பு கட்டமைப்பை உன்னிப்பாக ஆராய்ந்து எதிர்கால மேம்பாடுகளுக்கான வழிகாட்டுதலை வழங்குவதன் மூலம் இந்த சவால்களை சமாளிக்க முயல்கின்றது.

### பயனாளிகளை துல்லியமாக அடையாளம் காண்பதற்கு உதவுதல்

இந்த அறிக்கையின் முதன்மையான குறிக்கோள்களில் ஒன்று பயனாளிகளின் துல்லியமான அடையாளத்தை ஊக்குவிப்பதாகும். குறிப்பாக, சமுர்த்தி மற்றும் அஸ்வெசும திட்டங்கள் போன்ற ஏற்கனவே உள்ள திட்டங்களில் பெறுநர்களைச் சேர்ப்பதிலும் விலக்குவதிலும் குறிப்பிடத்தக்க பிழைகள் காணப்படுவதை அறிக்கைகளும் எமது ஆய்வுகளும் சுட்டிக்காட்டுகின்றன. உதாரணமாக, சமுர்த்தி பண உதவியை பெறும் 1.7 மில்லியன் குடும்பங்களில் 40 வீதமான குடும்பங்கள் மட்டுமே தேசிய வறுமைக் கோட்டிற்குக் கீழ் காணப்படுவதாக ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது.[1] உண்மையிலேயே உதவி தேவைப்படுபவர்களை சென்றடைவதை உறுதிசெய்வதற்கு, மேம்படுத்தப்பட்ட வழிமுறைகளின் அவசியத்தை இத்தகைய முரண்பாடுகள் வலியுறுத்துகின்றன.

### திறன்மிக்க வறுமை ஒழிப்பு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

ஏழை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு, செயற்திறன்மிக்க வறுமை ஒழிப்புத் திட்டங்கள் முக்கியமானதாகும். சமுர்த்தி திட்டத்தின் தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தப்பட்ட அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டம், பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு குறிப்பிட்ட நிதி உதவிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதன் இலக்குகள் இருந்தபோதிலும், ஆரம்ப கண்டுபிடிப்புகள் கணிசமான சவால்களை வெளிப்படுத்துகின்றன. இதில் அதிக எண்ணிக்கையிலான முறையீடுகள் மற்றும் பயனாளிகள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பது பற்றிய ஆட்சேபனைகள் என்பன உள்ளடங்கும். இந்தத் திட்டங்களின் செயற்திறனை மேம்படுத்துவதற்கான உத்திகளை இந்த அறிக்கை ஆராயும். அவை உடனடி நிவாரணம் மற்றும் நிலையான அபிவிருத்திக்கான ஆதரவை வழங்குவதை உறுதி செய்யும்.

### சார்ந்திருக்கும் கலாச்சாரத்தை மாற்றியமைத்தல்

தற்போது காணப்படும் சார்ந்திருக்கும் கலாச்சாரத்தை மாற்றியமைப்பது, மற்றுமொரு முக்கியமான நோக்கமாகும். உடனடி நிவாரணம் வழங்குவதற்கு சமூக பாதுகாப்பு திட்டங்கள் இன்றியமையாததாக காணப்பட்டாலும், அவை பயனாளிகளை தன்னிறைவு அடையச் செய்யும் வகையில் அமைய வேண்டும். நிதி உதவி வழங்குவதில் சமுர்த்தி மற்றும் அஸ்வெசும போன்ற திட்டங்கள் முக்கியமானவை. ஆனால் திறன்கள் பயிற்சி மற்றும் தொழில்முனைவோர் ஆதரவு போன்ற பொருளாதார வலுவூட்டலை ஊக்குவிக்கும் கூறுகளையும் அது உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இந்த அறிக்கையானது, பயனாளிகளிடையே சுயாதீனம் மற்றும் நெகிழ்வுத்தன்மையை மேம்படுத்துவதற்காக, இந்த திட்டங்களை மறுவடிவமைப்பு செய்வதற்கான வழிகளை ஆராயும்.

### சமூக பாதுகாப்புத் திட்டங்களின் முக்கியத்துவம்

### பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தியின் பின்னணியில் இதன் முக்கியத்துவம்

பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான அத்தியாவசிய கருவிகளாக சமூக பாதுகாப்புத் திட்டங்கள் உள்ளன. அவை, மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு ஒரு பாதுகாப்பு திட்டத்தை வழங்குவதோடு, பொருளாதார பாதிப்புகளை தாங்கி, அடிப்படை வாழ்க்கைத் தரத்தை பராமரிக்க உதவுகின்றன. இலங்கையில், இந்த வேலைத்திட்டங்களின் முக்கியத்துவம் அண்மைக்கால நெருக்கடிகளால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது, மில்லியன் கணக்கான இலங்கையர்களுக்கு ஆதரவளிப்பதில் அவசரகால பண உதவித் திட்டங்கள் முக்கிய பங்கு வகித்தன. தீவிர வறுமையைத் தடுப்பதன் மூலமும், அத்தியாவசிய சேவைகளை பெற்றுக்கொள்வதை எளிதாக்குவதன் மூலமும், சமூக பாதுகாப்புத் திட்டங்கள் பரந்த பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சிக்கு உதவுகின்றன.

1. "Only 40% Poor Among 1.7 Million Samurdhi Beneficiaries: LIRNEasia." *Daily FT*, 1 June 2023, www.ft.lk/news/Only-40-poor-among-1-7-million-Samurdhi-beneficiaries-LIRNEasia/56-749244.

## இலங்கையின் வறுமை உலக வங்கி மற்றும் LIRNEஆசியா தரவுகளின் ஒப்பீடு

உலக வங்கி மற்றும் பிராந்திய சிந்தனைக் குழுவான LIRNEasia ஆகியன இணைந்து முன்னெடுத்த தேசிய ரீதியான பிரதிநிதித்துவ கணக்கெடுப்பில், இலங்கையின் மோசமான வறுமை நிலைமை பற்றிய விரிவான கண்ணோட்டத்தை வெளிப்படுத்துகின்றன. பயனுள்ள சமூக பாதுகாப்பு திட்டங்கள் மற்றும் இலக்குவைக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களின் அவசியத்தை அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இலங்கையின் வறுமை தொடர்பான உலக வங்கி மற்றும் LIRNEasia தரவுகளின் ஒப்பீடு இங்கே தரப்பட்டுள்ளன:

| விகிதம் | உலக வங்கியின் தரவு | LIRNEasia தரவு |
|---|---|---|
| வறுமை வீதம் | 2022இல் 25.6% | 2023இல் 31% |
| வறுமை அதிகரிப்பு | | |
| வறுமையிலுள்ள மொத்த மக்கள்தொகை | 2021இல் 13.1% இல் இருந்து 2022இல் 25.6% ஆக அதிகரிப்பு. இது ஏறத்தாழ இரட்டிப்பாகும் | 2019 முதல் 2023 வரை 4 மில்லியன் மக்களால் அதிகரித்துள்ளது |
| நகர்ப்புற மற்றும் கிராமப்புற வறுமை | ஒரு வருடத்திற்குள் சுமார் 2.7 மில்லியன் மக்கள் வறுமைக்கு உள்ளாகியுள்ளனர் | 2023 இல் மொத்தம் 7 மில்லியன் மக்கள் வறுமையில் இருந்துள்ளனர் |
| பெருந்தோட்டத்துறை வறுமை | நகர்ப்புறங்களில் வறுமை விகிதம் மூன்று மடங்கு அதிகரித்து 15% ஆக உள்ளது. மேலும், வறுமையில் வாடும் மக்களில் 80% பேர் கிராமப்புறங்களில் உள்ளனர். | நகர்ப்புற வறுமை 6% இலிருந்து 18% ஆக மூன்று மடங்கு அதிகரித்துள்ளது கிராமப்புற வறுமை 15% இல் இருந்து 32% ஆக இரட்டிப்பாகியுள்ளது |
| சமூக பாதுகாப்புத் திட்டங்கள் | பெருந்தோட்டப் பகுதியில் வசிக்கும் அரைவாசிக்கும் மேற்பட்டோர் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளனர் | பெருந்தோட்டப் பகுதியில் வசிக்கும் அரைவாசிக்கும் மேற்பட்டோர் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளனர் |

### முக்கிய விடயங்கள்

- வறுமை அதிகரிப்பு: இரண்டு மூலங்களும் வறுமையில் குறிப்பிடத்தக்க உயர்வைக் குறிப்பிடுகின்றன, ஆனால் LIRNEasia தரவு உலக வங்கியின் 25.6% உடன் ஒப்பிடும்போது 31% அதிக விகிதத்தைக் குறிக்கிறது.
- நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேறுபாடுகள்: இரண்டு தரவுத்தொகுப்புகளும் நகர்ப்புற வறுமையின் அதிகரிப்பைக் காட்டுகின்றன, கிராமப்புறங்களில் இன்னும் பெரும்பான்மையான மக்கள் வசிக்கின்றனர் என்பதை காட்டுகின்றது.
- பெருந்தோட்டத் துறை: இரண்டு தரவுத்தொகுப்புகளும் பெருந்தோட்டத் துறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும், பாதிக்கும் மேற்பட்ட மக்கள் வறுமையில் வாழ்கின்றனர் என்பதையும் காட்டுகின்றது
- சமூக பாதுகாப்பு திட்டங்களின் செயற்திறன்: LIRNEasia சமூக உதவிகளை விநியோகிப்பதில் உள்ள திறமையின்மையை எடுத்துக்காட்டுகிறது, அதே நேரத்தில் உலக வங்கி இந்தத் திட்டங்களின் விரிவாக்கத்தை சுட்டிக்காட்டுகிறது, ஆனால் அவற்றின் போதாமையை ஒப்புக்கொள்கிறது.

(மூலம்: https://www.worldbank.org/en/country/srilanka and https://lirneasia.net/)

### மனித உரிமை மற்றும் சமூக நீதியின் வகிபாகம்

பொருளாதார காரணிகளுக்கு அப்பால், மனித உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும் சமூக நீதியை மேம்படுத்துவதற்கும் சமூக பாதுகாப்பு திட்டங்கள் முக்கியமானவை. சமூகப் பாதுகாப்புக்கான உரிமை பல்வேறு சர்வதேச மனித உரிமைகள் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது, அனைத்து குடிமக்களும் கண்ணியத்துடன் வாழ முடியும் என்பதை உறுதி செய்வதற்கான அரசின் கடமையை எடுத்துக்காட்டுகிறது. இலங்கையில், கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கப்படும் திரிபோஷ ஊட்டச்சத்து மற்றும் விசேட தேவையுடையவர்கள், முதியவர்கள் மற்றும் நீண்டகால சிறுநீரக நோயாளிகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் போன்ற திட்டங்கள் இந்த உரிமைகளைப் பாதுகாப்பதில் முக்கியமானவை. அந்தவகையில், சமூக பாதுகாப்பு திட்டங்களை வலுப்படுத்துவது என்பது கொள்கை செயற்திறன் மட்டுமன்றி, மனித கௌரவம் மற்றும் சமத்துவத்திற்கான அடிப்படை அர்ப்பணிப்பு என்பது இந்த அறிக்கையின் தர்க்கமாகும்.

சமூக பாதுகாப்பு திட்டங்கள் வெறும் பொருளாதார கருவிகள் அல்ல் அவை மனித உரிமைகள் மற்றும் சமூக நீதியை நிலைநாட்டுவதற்கான அடிப்படை கருவிகளாகும். நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு, அனைத்து நபர்களும் கண்ணியத்துடன் வாழவேண்டும் மற்றும் வளங்கள் மற்றும் வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதை உறுதிசெய்ய வேண்டும். விரிவான மற்றும் நன்கு செயற்படுத்தப்பட்ட சமூக பாதுகாப்பு திட்டங்கள் மூலம், அரசாங்கங்கள் மனித உரிமைகளுக்கான தமது கடமைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும் மற்றும் மிகவும் சமமானதும் நெகிழ்வானதுமான சமூகங்களை உருவாக்க முடியும்.

அத்தியாயம் 1

# சமூக நலன் கோட்பாட்டு அடிப்படைகள்

### 1. சமூக நலன் பற்றிய அறிமுகம்

*வரையறைகளும் நோக்கமும்*

சமூக நலன் என்பது தனிநபர்களினதும் சமூகங்களினதும் நல்வாழ்வை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட பரந்தளவிலான பொதுக் கொள்கைகளையும் சேவைகளையும் உள்ளடக்கியது. அவசியமானவர்களுக்கு நிதி உதவி, சுகாதாரம், கல்வி மற்றும் வீட்டு வசதி ஆகியவற்றை வழங்கும் திட்டங்கள் இதில் உள்ளடங்கும். வறுமை, சமத்துவமின்மை மற்றும் சமூக அநீதியை நிவர்த்தி செய்வதன் மூலம் சமூகத்தில் உள்ள அனைவரின், குறிப்பாக மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே சமூக நலனின் முக்கிய நோக்கமாகும்.

சமூக நல அமைப்புகள் பொதுவாக அரச தலையீடுகள் மூலம் செயற்படுத்தப்படுகின்றன, ஆனால் அரசு சாரா நிறுவனங்கள், கூட்டுறவு சமூகப் பொறுப்பு மற்றும் சமூகம் சார்ந்த முன்முயற்சிகளும் இதில் உள்ளடங்கலாம். சமூக நலன்களின் நோக்கம் பொருளாதார ஆதரவுக்கு அப்பாற்பட்டது இது சமூக உள்ளடக்கத்தை மேம்படுத்துவதையும், வளங்களுக்கான நியாயமான அணுகலை உறுதி செய்வதையும், ஒட்டுமொத்த சமூக நலனை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 2. கோட்பாட்டு ரீதியான கண்ணோட்டங்கள்

*தாராளமயம்*

தனிநபர் சுதந்திரம் மற்றும் உரிமைகள் மீது, தாராளமயம் கவனம் செலுத்துகிறது, அத்தோடு, சமூகத்தின் பாதிக்கப்படக்கூடிய உறுப்பினர்களைப் பாதுகாக்க ஒரு சமூக பாதுகாப்பு திட்டத்தின் அவசியத்தை அடையாளம் காண்கின்றது. தாராளவாத கண்ணோட்டத்தில், சமூக நலத்திட்டங்கள் அடிப்படை ஆதரவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இது சமூகத்தில் முழுமையாக பங்கேற்கும் வாய்ப்பை அனைவருக்கும் உறுதி செய்கிறது. இதில் சுகாதாரம், கல்வி மற்றும் வருமான ஆதரவு ஆகியவை அடங்கும். இவை தனிமனித சுதந்திரம் மற்றும் சமூக நீதியைப் பேணுவதற்கு இன்றியமையாததாகக் கருதப்படுகிறது (Locke; Rawls).

*புதிய தாராளமயம்*

சந்தை சார்ந்த அணுகுமுறைகள் மற்றும் தனிநபர் பொறுப்புக்கு புதிய தாராளமயம் முன்னுரிமை வழங்குகின்றது. பொருளாதார விவகாரங்களில் அரசின் தலையீட்டைக் குறைக்க வேண்டுமென இது அடிக்கடி பரிந்துரைக்கின்றது. எனினும், பாதிக்கப்படக்கூடிய மக்கள் மீது சந்தை ஏற்ற இறக்கங்களின் எதிர்மறையான விளைவுகளை குறைக்க சமூக பாதுகாப்பு திட்டங்களின் அவசியத்தையும் இது ஏற்றுக்கொள்கின்றது. ஒரு புதிய தாராளவாத நிலைப்பாட்டில் இருந்து, சமூக நலத் திட்டங்கள் குறைவாகவும் இலக்குவைக்கப்பட்டதாகவும் வடிவமைக்கப்பட்டு, தன்னிறைவு மற்றும் பொருளாதார பங்கேற்பை ஊக்குவிப்பதற்கு தற்காலிக உதவிகளை வழங்குகின்றன. இந்த திட்டங்கள் பெரும்பாலும் தனியார்மயமாக்கல் மற்றும் பொது மற்றும் தனியார் துறைகளுக்கு இடையிலான கூட்டாண்மைகளை வலியுறுத்துகின்றன. இவை, செலவு-செயற்திறன் மற்றும் செயற்திறன் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன. சுகாதாரம், கல்வி மற்றும் வருமான ஆதரவுக்கான அணுகல் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. எனினும், சமூக நலத்தின் முக்கிய இயக்கிகளாக தனிப்பட்ட நிறுவன மற்றும் சந்தை தீர்வுகளை ஊக்குவிக்கும் நிலைமைகளை உருவாக்குவதில் கவனம் செலுத்தப்படுகிறது. (Hayek; Friedman).

*சமூக ஜனநாயகம்*

தனிமனித சுதந்திரத்தை கூட்டு நலனுடன் சமநிலைப்படுத்துவதை சமூக ஜனநாயகம் வலியுறுத்துகிறது. சமத்துவம் மற்றும் சமூக நீதியை உறுதி செய்ய வலுவான சமூக பாதுகாப்பு திட்டத்தினை இது பரிந்துரைக்கிறது. சமூக ஜனநாயகக் கண்ணோட்டத்தில், சமூக நலத் திட்டங்கள் விரிவான ஆதரவை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளன. சமுதாயத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் முன்னேறுவதற்கு சம வாய்ப்புகள் இருப்பதை அவை உறுதி செய்கின்றன.

இதில் சுகாதாரம், கல்வி மற்றும் வருமான ஆதரவுக்கான உலகளாவிய அணுகல் அடங்கும். இவை அடிப்படை உரிமைகளாகக் கருதப்படுகின்றதே தவிர, வெறுமனே சலுகைகள் அல்ல. சந்தைகளை ஒழுங்குபடுத்துவதிலும், செல்வத்தை மறுபகிர்வு செய்வதிலும் அரசு முக்கிய பங்கு வகிக்கிறது என்று சமூக ஜனநாயகவாதிகள் நம்புகின்றனர். இது சமத்துவமின்மையைக் குறைக்கவும் சமூக ஒற்றுமையை மேம்படுத்தவும் உதவுகிறது. (Keynes; Bernstein).

### *மார்க்சிய கோட்பாடு*

கார்ல் மார்க்சின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட மார்க்சியக் கோட்பாடு, வர்க்கப் போராட்டம் மற்றும் தொழிலாள வர்க்கத்தின் சுரண்டலுக்குத் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. ஒரு மார்க்சியக் கண்ணோட்டத்தில், சமூக நலத் திட்டங்கள் செல்வத்தின் மிகவும் சமமான பகிர்வை நோக்கிய படிகளாகும். இவை, இறுதியில் வர்க்கமற்ற சமூகத்தை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. (Marx; Engels).

### *மனித உரிமைகள் கண்ணோட்டம்*

சமூகப் பாதுகாப்பு மற்றும் போதுமான வாழ்க்கைத் தரத்தினை அனுபவிக்க அனைவருக்கும் உரிமை உண்டு என, மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் போன்ற சர்வதேச ஆவணங்கள் வலியுறுத்துகின்றன. ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகள் போன்ற நவீன கட்டமைப்புகள் இந்த முன்னோக்கை மேலும் ஆதரிக்கின்றன. குறிப்பாக, இலக்கு 1 (வறுமையை ஒழித்தல்) மற்றும் இலக்கு 10 (ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்) ஆகியன, அனைவரையும் உள்ளடக்கிய சமூகப் பாதுகாப்பு கட்டமைப்புகளுக்குப் பரிந்துரைக்கின்றன. இந்த உரிமைகளைப் பாதுகாக்க சமூக நலத் திட்டங்கள் அவசியம். அனைத்து தனிநபர்களும் கண்ணியத்துடனும் சமத்துவத்துடனும் வாழ முடியும் என்பதை அவர்கள் உறுதிசெய்கின்றனர். மேலும் அவை உலகளாவிய அளவில் நிலையான அபிவிருத்தி மற்றும் சமூக நீதிக்கு பங்களிக்கின்றன.

## 3. சமூக நலனின் வரலாற்று பரிணாமம்

### *உலகளாவிய கண்ணோட்டங்கள்*

சமூக நலன் என்ற கருத்து காலப்போக்கில் கணிசமாக வளர்ந்துள்ளது. பல்வேறு கலாச்சாரங்களிலும் இது மாறிவிட்டது. பண்டைய நாகரிகங்களில், பரஸ்பர உதவி மற்றும் இனம்சார்ந்த ஆதரவு பரவலாகக் காணப்பட்டன. குடும்பங்கள், குலங்கள் மற்றும் மத அமைப்புகள் என்பன, பெரும்பாலும் அவசியமானோருக்கு உதவின. இடைப்பட்ட காலத்தில், மத நிறுவனங்கள் தொண்டு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தன. மடங்கள் மற்றும் தேவாலயங்கள் என்பன ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் முக்கிய பங்கு வகித்தன. (Trattner).

மறுமலர்ச்சி காலத்தின்போது, சமூக உதவியின் கட்டமைக்கப்பட்ட வடிவங்கள் வெளிப்பட்டன. ஏழைகள், நோயாளிகள் மற்றும் முதியவர்களைக் கவனிப்பதற்காக பொது அன்னதானம் மற்றும் மருத்துவமனைகளை ஐரோப்பிய நகரங்கள் உருவாக்கின. தொழில்துறை புரட்சி குறிப்பிடத்தக்க சமூக மாற்றங்களை கொண்டு வந்தது. இது சமூக சீர்திருத்த இயக்கங்களுக்கு வழிவகுத்தது மற்றும் ஓட்டோ வொன் பிஸ்மார்க்கின் கீழ் ஜெர்மனியின் விரிவான சமூக காப்பீட்டு அமைப்பு போன்ற சமூக காப்பீட்டு திட்டங்களை ஐரோப்பாவில் நிறுவியது. (Hennock).

20ஆம் நூற்றாண்டில், சமூக நல அமைப்புகள் குறிப்பாக இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் கணிசமான அளவு விரிவடைந்தன. ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பெவரிட்ஜ் அறிக்கையானது, நவீன நலன்புரி அமைப்புக்கு அடித்தளம் இட்டது. இது விரிவான சமூக சேவைகள், சுகாதாரம் மற்றும் வேலையின்மைக்கான தீர்வுகள் போன்ற நலன்களை அறிமுகப்படுத்தியது. ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச நிறுவனங்கள் சமூக நலனை அடிப்படை மனித உரிமையாக முன்வைத்துள்ளன. மேலும், சமூக பாதுகாப்பு மற்றும் நலன்களின் முக்கியத்துவத்தை நிலையான அபிவிருத்தி இலக்குகள் போன்ற முயற்சிகள் வலியுறுத்துகின்றன. (Beveridge; United Nations).

## பல்வேறு நாடுகளில் உள்ள சமூகநலத்திட்டங்களின் மாதிரி

### *ஐக்கிய அமெரிக்கா*

அமெரிக்காவின் சமூக நல அமைப்பானது, குறிப்பாக அந்நாட்டின் பெரும் மந்தநிலையின் போது உருவாக்கப்பட்டது. 1935ஆம் ஆண்டு சமூகப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது இது நடந்தது. இந்த சட்டமானது, சமூக பாதுகாப்பு போன்ற திட்டங்களை நிறுவியது. குறிப்பாக, சமூக பாதுகாப்பு ஓய்வூதியம், இயலாமை மற்றும் தப்பிப்பிழைத்தவர்களுக்கான நன்மைகளை வழங்குகின்றது.

### *ஐக்கிய இராச்சியம்*

1942இன் பிவெரிட்ஜ் அறிக்கையானது, ஐக்கிய இராச்சியத்தின் சமூக நல அமைப்பை வடிவமைப்பதில் பெரும் பங்காற்றியதோடு, நவீன நலன்புரி அரசிற்கான அடித்தளத்தை இட்டது. வேலைவாய்ப்பின்மை, நோய் நிலைமை மற்றும்

ஓய்வூதிய பலன்களை உள்ளடக்கிய ஒரு விரிவான சமூக காப்பீட்டு முறையை இந்த அறிக்கை முன்மொழிந்தது. 1948ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தேசிய சுகாதார சேவையானது, உலகளவில் அனைவருக்கும் சுகாதார பாதுகாப்பிற்கு உத்தரவாதம் வழங்கும் வகையில், இலவச சுகாதார சேவையை வழங்குகிறது. இதற்கு மேலதிகமாக, ஐக்கிய இராச்சியமானது பல்வேறு வகையான சமூக உதவிகளை வழங்குகிறது. குறிப்பாக வீட்டு வசதிகள் மற்றும் குழந்தைகளுக்கான கொடுப்பனவுகள் என்பன இதில் உள்ளடங்கும்.

### *சுவீடன்*

நோர்டிக் மாதிரிக்கு பெயர் பெற்ற ஸ்வீடன், அதன் விரிவான நலன்புரி துறைக்கு பிரபலமானது. இது உலகளாவிய பாதுகாப்பு மற்றும் சமத்துவத்தில் கவனம் செலுத்துகிறது. சுவீடனின் நலன்புரி அமைப்பானது, விரிவான சுகாதாரம், புதிதாக பிறந்த குழந்தை பராமரிப்பிற்கு வழங்கப்படும் தாராளமான பெற்றோர் விடுமுறை, இலவச கல்வி மற்றும் தொழில்வாய்ப்பின்றி இருப்போருக்கு கணிசமான நலன்களை வழங்குகின்றது. சுவீடனில் சமூக பாதுகாப்பானது, உலகளாவிய ஓய்வூதிய திட்டங்கள் மற்றும் வருமான ஆதரவு திட்டங்களைக் கொண்டுள்ளது. இவை அதிக வரிகளால் நிதியளிக்கப்படுகின்றன, இது உயர்ந்த வாழ்க்கைத் தரம் மற்றும் குறைந்த வறுமை விகிதங்களை உறுதிப்படுத்த உதவுகிறது.

### *இந்தியா*

இந்தியாவின் சமூக நல அமைப்பானது, இலக்குவைக்கப்பட்ட மற்றும் உலகளாவிய திட்டங்களை உள்ளடக்கியது. இந்தத் திட்டங்கள் வறுமையைக் குறைக்கவும், பாதிப்பை எதிர்கொள்ளக்கூடிய மக்களுக்கு ஆதரவளிக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. கிராமப்புற குடும்பங்களுக்கு வருடத்திற்கு 100 நாட்கள் கூலி வேலைவாய்ப்பை உறுதி செய்யும் மகாத்மா காந்தி தேசிய கிராமிய வேலை உறுதிச் சட்டம் இந்த முக்கிய முயற்சிகளில் உள்ளடங்கும். மற்றொரு முன்முயற்சியான பொது விநியோக கட்டமைப்பு, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு மானிய விலையில் தானிய உணவுகளை வழங்குகின்றது. இதற்கு மேலதிகமாக, தேசிய சுகாதாரத் திட்டம் சுகாதாரப் பாதுகாப்பில் கவனம் செலுத்துகிறது, அதே நேரத்தில் பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா திட்டமானது, நிதி உள்ளடங்கல் தன்மையை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### *தென்னாபிரிக்கா*

தென்னாபிரிக்காவின் சமூக நல அமைப்பானது, அதன் நிறவெறி வரலாற்றால் ஏற்படும் குறிப்பிடத்தக்க சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. குழந்தைக்கான உதவி மானியம், முதியோருக்கான ஓய்வூதியம் மற்றும் விசேட தேவையுடையோருக்கான மானியம் உட்பட பல மானியங்களை அரசாங்கம் வழங்குகின்றது. இந்த செயற்திட்டங்கள் யாவும் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் விசேட தேவையுடையோர் உட்பட மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் போன்ற முன்முயற்சிகளை தென்னாப்பிரிக்கா கொண்டுள்ளது. இது குறைந்த வருமானம் கொண்ட சமூகங்களுக்கான வீட்டுவசதி மற்றும் அடிப்படை சேவைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### *இலங்கையின் வரலாற்றுப் பின்னணி*

இலங்கையின் சமூக நலன்புரி வரலாறு என்பது, பாரம்பரிய சமூக அடிப்படையிலான ஆதரவு கட்டமைப்புகளை முறையான சமூக நலக் கொள்கைகளின் படிப்படியான அபிவிருத்தியுடன் இணைக்கின்றது. பண்டைய மற்றும் இடைக்காலத்தில், இலங்கையில் வலுவான சமூகம் மற்றும் குடும்பக் கட்டமைப்புகள் ஆகியன, தேவையுடையோருக்கு ஆதரவாக செயற்பட்டன. அறப்பணிகளில் மடங்களும் கோயில்களும் முக்கிய பங்கு வகித்தன. (ஜயவர்தன).

காலனித்துவ காலத்தில், இலங்கை பல ஐரோப்பிய காலனித்துவ தாக்கங்களுக்கு உட்பட்டது. இவை ஒவ்வொன்றும் நாட்டின் சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்புகளில் தாக்கத்தை ஏற்படுத்தியது. முறையான கல்வி மற்றும் சுகாதார அம்சங்களை கிறிஸ்தவ மிஷனரிகள் அறிமுகப்படுத்தின. ஆனால் பாரம்பரிய ஆதரவு அமைப்புகள் தொடர்ந்து பல சமூகங்களுக்கு இன்றியமையாததாக காணப்பட்டது. (பீரிஸ்).

19ஆம் மற்றும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், இலங்கையில் சமூக மற்றும் தொழிலாளர் இயக்கங்கள் தோன்றி, தொழிற்சங்கங்களை உருவாக்க வழிவகுத்தன. இந்த முன்னேற்றங்கள் எதிர்கால சமூக நல முயற்சிகளுக்கான அடித்தளத்தை அமைத்தன. 1948 இல் சுதந்திரம் பெற்ற பின்னர், இலங்கை பல்வேறு சமூக நலத்திட்டங்களையும் கொள்கைகளையும் அறிமுகப்படுத்தியது. அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் சுகாதாரம், கல்வி மற்றும் சமூக சேவைகளை வழங்குவதில் மிகவும் தீவிரமாக பங்காற்றின. (பீரிஸ்).

20ஆம் நூற்றாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க சீர்திருத்தங்களில், முக்கிய தொழிற்துறைகளின் தேசியமயமாக்கல், நில சீர்திருத்தங்கள் மற்றும் இலவச கல்வி மற்றும் சுகாதார அறிமுகம் என்பன முன்னெடுக்கப்பட்டன. வறுமையை ஒழிப்பதற்கும் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் ஜனசவிய மற்றும் சமுர்த்தி போன்ற திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அண்மித்த வருடங்களில், பொருளாதார சவால்கள், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் உலகளாவிய நெருக்கடிகளை இலங்கை எதிர்கொண்டுள்ளது. (அபேரத்ன).

சமூக நலத்தின் தத்துவார்த்த அடித்தளங்கள் மற்றும் வரலாற்று அபிவிருத்தியை புரிந்துகொள்வது, சமூக நீதியை முன்னேற்றுவதிலும் பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதிலும் இந்தத் திட்டங்களின் சிக்கல்கள் மற்றும் முக்கிய பங்கை அடையாளம் காண உதவுகிறது.

## குறிப்புரைகள்


Abeyratne, Sirimal. *Economic Policy in Sri Lanka: Issues and Debates.* Colombo: Vijitha Yapa Publications, 2000.

Beveridge, William. *Social Insurance and Allied Services.* London: His Majesty's Stationery Office, 1942.

Engels, Friedrich, and Karl Marx. *The Communist Manifesto.* Penguin Classics, 2002.

Hennock, E. P. *The Origin of the Welfare State in England and Germany, 1850-1914: Social Policies Compared.* Cambridge University Press, 2007.

Hobbes, Thomas. *Leviathan.* Penguin Classics, 1985.

Jayawardena, Kumari. *Nobodies to Somebodies: The Rise of the Colonial Bourgeoisie in Sri Lanka.* Zed Books, 2002.

Locke, John. *Two Treatises of Government.* Cambridge University Press, 1988.

Mill, John Stuart. *Utilitarianism.* Oxford University Press, 1998.

Peiris, G. H. *An Appraisal of the Culture of Sri Lanka.* Tisara Prakasakayo, 1978.

Pieris, P. E. *Ceylon: The Portuguese Era.* Asian Educational Services, 1999.

Rawls, John. *A Theory of Justice.* Harvard University Press, 1971.

Trattner, Walter I. *From Poor Law to Welfare State: A History of Social Welfare in America.* Free Press, 1999.

United Nations. *Universal Declaration of Human Rights.* United Nations, 1948.

Social Security Administration. "Social Security Act." Social Security Administration, www.ssa.gov/history/35act.html.

Centers for Medicare & Medicaid Services. "Medicare & Medicaid: Keeping Us Healthy for 50 Years." Centers for Medicare & Medicaid Services, www.cms.gov/About-CMS/Agency-Information/History.

U.S. Department of Health and Human Services. "Temporary Assistance for Needy Families (TANF)." U.S. Department of Health and Human Services, www.acf.hhs.gov/ofa/programmes/tanf.

Beveridge, William. *Social Insurance and Allied Services.* His Majesty's Stationery Office, 1942.

NHS. "The NHS in England." NHS, www.nhs.uk/using-the-nhs/about-the-nhs/the-nhs/.

UK Government. "Benefits and Financial Support." UK Government, www.gov.uk/browse/benefits.

Swedish Institute. "Social Security in Sweden." Swedish Institute, sweden.se/society/social-security-in-sweden/.

Swedish Institute. "Health care in Sweden." Swedish Institute, sweden.se/society/health-care-in-sweden/.

Swedish Institute. "Sweden's welfare system." Swedish Institute, sweden.se/society/sweden-welfare/.

Ministry of Rural Development, Government of India. "About MGNREGA." Ministry of Rural Development, Government of India, nrega.nic.in/netnrega/home.aspx.

Department of Food & Public Distribution, Government of India. "Public Distribution System." Department of Food & Public Distribution, Government of India, dfpd.gov.in/public-distribution.htm.

Ministry of Health and Family Welfare, Government of India. "National Health Mission." Ministry of Health and Family Welfare, Government of India, nhm.gov.in/.

Ministry of Finance, Government of India. "Pradhan Mantri Jan-Dhan Yojana (PMJDY)." Ministry of Finance, Government of India, pmjdy.gov.in/.

South African Government. "Social Grants." South African Government, www.gov.za/services/services-residents/social-benefits/social-grants.

South African Government. "Reconstruction and Development Programme (RDP)." South African Government, www.gov.za/issues/reconstruction-and-development-programme-rdp.

அத்தியாயம் 2

# இலங்கையில் சமூக நலன்களின் வரலாறு

### 1. காலனித்துவ கால தாக்கங்கள்

#### *முறையான கல்வி மற்றும் சுகாதாரம் பற்றிய அறிமுகம்*

இலங்கையின் காலனித்துவ சகாப்தம் 16 ஆம் நூற்றாண்டு முதல் 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை நீடித்தது. இந்த நேரத்தில், மூன்று பெரிய ஐரோப்பிய சக்திகளான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர் ஆகியன ஆட்சி செய்தன. இந்த ஆட்சியாளர்கள் ஒவ்வொருவரும் நாட்டின் சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்புகளில் தனித்துவமான தாக்கத்தை ஏற்படுத்தி, முறையான கல்வி மற்றும் சுகாதார அமைப்புகளின் அபிவிருத்தியை வடிவமைத்தனர்.

#### *போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலங்கள்*

போர்த்துக்கேயர் (1505-1658) மற்றும் ஒல்லாந்தர் (1658-1796) ஆட்சிக் காலங்களில், வர்த்தக வழிகள் மற்றும் வளங்களைக் கட்டுப்படுத்துவதில் பிரதானமாக கவனம் செலுத்தப்பட்டது. சமூக நலனில் அவற்றின் தாக்கம் குறைவாகவே காணப்பட்டது, எனினும், அவை எதிர்கால முன்னேற்றங்களுக்கு அடித்தளமாக அமைந்தன. போர்த்துக்கேயர்கள், குறிப்பாக உள்ளூர் மக்களை மதம் மாற்றுவதற்காக தேவாலயங்களையும் பாடசாலைகளையும் நிறுவுவதன் மூலம் கிறிஸ்தவத்தை அறிமுகப்படுத்தினர். இது தற்செயலாக சில அடிப்படை கல்வி வாய்ப்புகளையும் உருவாக்கியது. ஆரம்பக் கல்வியின் மிகவும் கட்டமைக்கப்பட்ட முறையை உருவாக்குவதன் மூலம் இந்தப் போக்கினை போர்த்துக்கேயர்கள் தொடர்ந்தனர். எனினும், அது குறிப்பிட்ட சமூகங்களுக்கு, குறிப்பாக கிறிஸ்தவத்திற்கு மாறுபவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது. (பீரிஸ் 45-67).

#### *பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்காலம்*

பிரித்தானிய காலனித்துவ காலத்தில் (1796-1948) சமூக நலனில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன. பிரித்தானிய நிர்வாகம் முறையான மற்றும் பரவலான கல்வியையும் சுகாதார முறையையும் அறிமுகப்படுத்தியது. இது இலங்கையில் நவீன சமூக நல கட்டமைப்புகளுக்கு அடித்தளமிட்டது.

#### *கல்வி*

திறமையான நிர்வாகம் மற்றும் வர்த்தகத்திற்கு கல்வி கற்ற மக்கள் அவசியம் என்பதை உணர்ந்த பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம், இலங்கையின் கல்வி முறையில் பாரிய சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது. 1836ஆம் ஆண்டில், அரச நிதியுதவியுடன் கூடிய கல்வி முறையை உருவாக்குவதற்கு கோல்புறுக்-கமரூன் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் வழிவகுத்தன. புதிய பாடசாலைகள் நிறுவப்பட்டன, மிஷனரி பாடசாலைகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. பாடசாலைகளைக் கண்காணிக்கவும், கல்வியை முறையானதாக மாற்றவும், 1869ஆம் ஆண்டு அரச கல்வித் திணைக்களம் உருவாக்கப்பட்டு, இவ்விடயங்களை மேலும் அணுகக்கூடியதாக மாற்றியது. முதலில் சரியான மேற்பார்வை மற்றும் நிர்வாகம் இல்லாத போதிலும், பல கிறிஸ்தவ பாடசாலைகள் பௌத்த, இந்து மற்றும் முஸ்லிம் அமைப்புகளை தமது சொந்த பாடசாலைகளை நிறுவ வழிவகுத்தன. 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், பிரித்தானியர்கள் இலங்கையின் நவீன கல்வி முறைக்கு வலுவான அடித்தளத்தை அமைத்து கல்வி வாய்ப்புகளை பெரிதும் விரிவுபடுத்தினர்.

#### *சுகாதார பராமரிப்பு*

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில், சுகாதாரத்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டன. நாடு முழுவதும் மருத்துவமனைகளையும் சிகிச்சை நிலையங்களையும் அமைத்ததன் மூலம் ஆங்கிலேயர்கள் மேற்கத்திய மருத்துவ நடைமுறைகளை அறிமுகப்படுத்தினர். 1870இல் நிறுவப்பட்ட கொழும்பு மருத்துவக் கல்லூரியானது, மேற்கத்திய மருத்துவத்தில் உள்ளூர் மருத்துவப் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் முக்கிய பங்காற்றியது. பெரியம்மை தடுப்பூசி பிரச்சாரங்கள் மற்றும் மலேரியாவைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் போன்ற பொது சுகாதார முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இச்செயற்பாடுகள் யாவும், மக்களின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் ஆயுட்காலத்தையும் பெரிதும் மேம்படுத்தின. (பீரிஸ் 89-102).

### *சமூக நலன் மீதான தாக்கம்*

காலனித்துவ காலத்தில் முறையான கல்வி மற்றும் சுகாதார சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டமையானது, இலங்கை சமூகத்தில் நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்தியது. இந்தக் கட்டமைப்புகள் யாவும், எழுத்தறிவு வீதத்தையும் பொதுச் சுகாதாரத் துறையையும் மேம்படுத்தியது மட்டுமன்றி, சுதந்திரத்திற்குப் பின்னர் மிகவும் கட்டமைக்கப்பட்ட சமூக நல அமைப்பை உருவாக்குவதற்கான அடித்தளத்தையும் அமைத்தன. காலனித்துவ கல்வி முறையானது கல்விகற்ற இலங்கையர்களை உருவாக்கியது. இவர்கள், பின்னர் நாட்டின் ஆட்சி மற்றும் சமூக சீர்திருத்தங்களில் முக்கிய பங்காற்றினர். இதேபோல், ஆங்கிலேயர்களால் கட்டமைக்கப்பட்ட சுகாதார உட்கட்டமைப்பானது, சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கை அரசாங்கங்களுக்கு ஒரு அடித்தளத்தை வழங்கியது. (விக்ரமசிங்க 213-229).

காலனித்துவ சகாப்தத்தில் சுரண்டல் நிலை காணப்பட்ட போதிலும், கல்வி மற்றும் சுகாதாரத்தின் முக்கிய கூறுகளை நிறுவியதன் மூலம் இலங்கையின் சமூக நல கட்டமைப்பிற்கு எதிர்பாராத வகையில் பங்களிப்புச் செய்தது. சமூக நலன் மற்றும் பொதுக் கொள்கைக்கான நாட்டின் பிற்கால அணுகுமுறைகளை வடிவமைப்பதில் இந்த முன்னேற்றங்கள் முக்கியமானவை. சுதந்திரத்திற்குப் பின்னரான காலத்தில், சமூக சேவைகளை விரிவுபடுத்துவதற்கு இலங்கை இந்த கட்டமைப்புகளை பயன்படுத்தியது. இது மனித அபிவிருத்தி குறிகாட்டிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுக்கு வழிவகுத்தது. கல்வி மற்றும் சுகாதாரத்தில் காலனித்துவ சீர்திருத்தங்களின் மரபு, இன்றைய சமூக நலக் கொள்கைகளை காலனித்துவ வரலாறு எவ்வாறு பாதிக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. நவீன அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு வரலாற்று அடித்தளங்களை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை இது வலியுறுத்துகிறது. (விக்ரமசிங்க 213-229).

## சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் சமூக நலன் மற்றும் பாதுகாப்பு கட்டமைப்புகளின் பரிணாம வளர்ச்சி

### *சுதந்திரத்திற்குப் பின்னரான ஆரம்ப சகாப்தம்: ரேஷன் முறை*

1948இல் சுதந்திரம் பெற்ற பின்னர், அப்போது சிலோன் என்று அழைக்கப்பட்ட இலங்கை, உணவுப் பாதுகாப்பையும் அத்தியாவசியப் பொருட்களின் நியாயமான விநியோகத்தையும் உறுதிப்படுத்துவதற்கு போர்க்கால ரேஷன் முறையை வைத்திருந்தது. அரிசி, சீனி மற்றும் கோதுமை மா ஆகியவற்றை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளும் வகையில், மக்களுக்கு ரேஷன் புத்தகங்கள் வழங்கப்பட்டன. இந்த முறையானது, மக்களின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்வதையும் உணவு பற்றாக்குறையை குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டது.

### *1970களில் நிலவிய பொருளாதார நெருக்கடி*

1970களில், உலகளாவிய எண்ணெய் நெருக்கடி, தேயிலை மற்றும் இறப்பர் போன்ற முக்கிய ஏற்றுமதிகளுக்கான மோசமான வர்த்தக நிலைமைகள் உட்பட பாரிய பொருளாதார சவால்களை இலங்கை எதிர்கொண்டது. இந்த காரணிகள், உள்நாட்டு பணவீக்கத்துடன், இலங்கையின் பொருளாதாரத்தின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தியது, உணவுப் பற்றாக்குறையை மோசமாக்குகிறது மற்றும் ரேஷன் முறையைச் சார்ந்திருப்பதை அதிகரித்தது. ரேஷன் பொருட்களின் நிலையான விநியோகம் மற்றும் சிறந்த தரத்தை பேணுவதில் அரசாங்கத்திற்கு சிக்கல் நிலை காணப்பட்டது. இது பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது.

### *உணவு முத்திரைகளுக்கு மாற்றம்: ஜே.ஆர்.ஜெயவர்தனவின் சீர்திருத்தங்கள்*

1977இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் தேர்தல் ஒரு மாற்றத்தைக் குறித்தது. இந்த மாற்றம் பொருளாதார தாராளமயமாக்கலை நோக்கியதாக இருந்தது. 1978இல், அவரது அரசாங்கம் ரேஷன் முறையை ஒழித்து, உணவு முத்திரைத் திட்டத்தை கொண்டுவந்தது. இந்தப் புதிய கட்டமைப்பானது, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு குறிப்பிட்ட உதவிகளை வழங்குவதன் மூலம் நிர்வாகச் செலவுகளைக் குறைத்து செயற்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. அத்தியாவசியப் பொருட்களை சந்தை விலையில் கொள்வனவு செய்வதற்கு, பயனாளிகள் உணவு முத்திரைகளைப் பயன்படுத்தலாம். அதிக நுகர்வோர் தெரிவு மற்றும் நெகிழ்வுத்தன்மையை பேணும் வகையில், அரசாங்கம் இந்தப் பொருட்களுக்கு ஓரளவு மானியம் வழங்கியது.

### *ஜனசவிய நிகழ்ச்சித்திட்டம்*

1989ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஜனசவிய திட்டம் வறுமையை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டது. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மத்தியில் பொருளாதார தன்னிறைவை மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டமைந்தது. இது, சிறிய அளவிலான வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு, நிதியுதவிகள், தொழிற்பயிற்சி மற்றும் ஆதரவை வழங்கியது. நிதி மானியங்களுடன் கட்டாய சேமிப்புத் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது. செயற்திட்டத்தின் நிறைவில், பயனாளிகள் தாம் சேமித்த தொகையை மூலதனமாகப் பயன்படுத்த முடியும்.

### *சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம்*

1995ஆம் ஆண்டு, ஜனசவிய திட்டத்திற்கு பதிலாக சமுர்த்தித் திட்டம் கொண்டுவரப்பட்டது. இது வறுமையை ஒழிப்பதற்கான மிகவும் விரிவான அணுகுமுறையை வழங்கியது. சமுர்த்தி நிதி உதவியை சேமிப்பு மற்றும் கடன் திட்டங்களுடன் இணைத்தது. பயனாளிகளின் சமூக-பொருளாதார நிலையை உயர்த்துவதற்கான சமூக மேம்பாட்டுத் திட்டங்களும் இதில் அடங்கும். பயனாளிகளின் சமூக-பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக, சமுர்த்தி நிதி உதவியை சேமிப்பு, கடன் திட்டங்கள் மற்றும் சமூக மேம்பாட்டு திட்டங்களுடன் இணைத்தது. இலங்கையின் சமூக நலன்புரி முயற்சிகளுக்கு இது ஒரு இடமாக மாறிய அதேவேளை, இவ்வேலைத்திட்டம் பிரச்சினைகளையும் எதிர்கொண்டது. இந்த பிரச்சினைகளில் அரசியல்மயமாக்கல் மற்றும் இலக்கு வைப்பதில் திறமையின்மை ஆகியவை அடங்கும்.

## குறிப்புரைகள்


Chandraprema, C. A. *Sri Lanka: The Years of Terror.* Colombo, Lake House Bookshop, 1991.

Lakshman, W. D., and Clement Allan Tisdell, editors. *Sri Lanka's Development Since Independence: Socio-economic Perspectives and Analyses.* Nova Science Publishers, 2000.

Department of Census and Statistics, Sri Lanka. *Annual Reports.* Government of Sri Lanka.

Ministry of Social Welfare and Primary Industries, Sri Lanka. *Reports.* Government of Sri Lanka.

"The Journal of Development Studies." Taylor & Francis Online.

"Asian Survey." University of California Press.

Central Bank of Sri Lanka. *Annual Reports.*

World Bank and International Monetary Fund (IMF). *Reports on Sri Lanka's Economic Policies.*

Peiris, G. H. *An Appraisal of the Culture of Sri Lanka.* Tisara Prakasakayo, 1978.

Pieris, P. E. *Ceylon: The Portuguese Era.* Asian Educational Services, 1999.

Wickramasinghe, Nira. *Sri Lanka in the Modern Age: A History of Contested Identities.* University of Hawaii Press, 2006.

அத்தியாயம் 3

# நிகழ்வு ஆய்வு - அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டம்

## 1. பின்னணியும் குறிக்கோள்களும்

### *சமுர்த்தியிலிருந்து அஸ்வெசுமவிற்கான மாற்றம்*

சமுர்த்தி வேலைத்திட்டத்தின் தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கத்தினால் அஸ்வெசும நலன்புரி நன்மைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. சமுர்த்தி திட்டம் 1995 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து வறுமை ஒழிப்பை இலக்காகக் கொண்ட முதன்மையான சமூக நலத்திட்டமாகும். சமுர்த்தி வேலைத்திட்டம் பரவலாக காணப்பட்ட போதிலும், பல வருடங்களாக பல்வேறு பிரச்சினைகள் காரணமாக விமர்சனங்களை எதிர்கொண்டது. அரசியல் செல்வாக்கு, திறமையின்மை, மோசமான இலக்கு, மற்றும் பயனாளிகளை வறுமையில் இருந்து திறம்பட மீட்க இயலாமை ஆகியவை இதில் அடங்கும். மிகவும் நெறிப்படுத்தப்பட்ட மற்றும் பயனுள்ள நலத்திட்டத்திற்கு காணப்பட்ட தேவையே, அஸ்வெசும திட்டத்தின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது. இந்த புதிய திட்டமானது, சமுர்த்தி திட்டத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதன் மூலம் பாதிப்பை எதிர்கொள்ளக்கூடிய மக்களுக்கு அதிக நிதி உதவிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நிதி உதவி தேவைப்படுபவர்களை சென்றடைவதை உறுதி செய்யும் வகையில், பயனாளிகளை தெரிவுசெய்யும்போது துல்லியத்தன்மையை மேம்படுத்துவதே அஸ்வெசும திட்டத்தின் பிரதான நோக்கமாகும். மேம்பட்ட தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம், சமுர்த்தித் திட்டத்தில் சிக்கல்களை ஏற்படுத்திய பயனாளிகளை விலக்கி அல்லது உள்ளடக்குவதில் உள்ள பிழைகளைக் குறைப்பதைத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, பயனாளிகளிடையே பொருளாதார தன்னிறைவை ஊக்குவிக்கும் ஒருங்கிணைந்த வளர்ச்சி முயற்சிகள் மூலம் நிலையான வறுமை ஒழிப்புக்கு ஆதரவளிப்பதை அஸ்வெசும திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

"எனது நிலைமையை யாரால் வேண்டுமானாலும் உங்களிடம் கூறலாம். எனக்கு 31 வயதாகின்றது. எனக்கு முழுமையான இயலாமையுடைய ஒரு மகளும் இரட்டை ஆண்குழந்தைகளும் உள்ளனர். எனது கணவர் கூலிக்கு மீனவராக பணியாற்றுகின்றார். எனது இளைய மகன் அஞ்சல் அலுவலகத்தில் பணிபுரிகின்றார், எனினும், அவருக்கு இன்னும் நிரந்தரமாக தொழில் கிடைக்கவில்லை. எனது மகன் அஞ்சல் அலுவலகத்தில் பணிபுரிவதால் சமுர்த்தி சலுகைகள் மற்றும் ஏனைய அனைத்து உரிமைகளையும் இழந்துவிட்டோம். சமுர்த்தி உதவியாக நான் 3500 ரூபாவினை பெற்றேன். ஆனால், பின்னர் அது நிறுத்தப்பட்டது. அஸ்வெசுமவிற்கு நான் விண்ணப்பித்த போதும், எனது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. அதற்கெதிராக நான் மேன்முறையீடு செய்தேன். எனினும், இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை."

வினீதா, கொடவாய, இல்லத்தரசி

நான் கணவனை இழந்த ஒரு தாய். எனக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர் மற்றும் அவர்கள் அனைவரும் திருமணம் முடித்துவிட்டனர். கீரைகளை விற்று நான் எனது வாழ்க்கையை நடத்துகின்றேன். மறைந்த எனது கணவர் ஒரு கையால் இயக்கும் உழவு இந்திரத்தை வைத்திருந்தார். அதனால் சமுர்த்தி சலுகைகள் இடைநிறுத்தப்பட்டன. அஸ்வெசுமவிற்கு நான் விண்ணப்பித்தேன். எனினும், இதுவரை எனக்குக் கிடைக்கவில்லை.

ஹின்னிஹாமி (பெயர் மாற்றப்பட்டுள்ளது),
கீரை விற்பனையாளர், அக்குரஸ்ஸ

## *இலங்கையில் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட சமூக பாதுகாப்புத் திட்ட அமைப்பிற்கு மாறுதல்*

முன்னதாக, இலங்கையில், மக்கள் முக்கியமாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அல்லது கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக சமூக பாதுகாப்பு திட்ட நன்மைகளுக்காக விண்ணப்பித்திருந்தனர். இந்த அமைப்பு மிகவும் அரசியல்மயமாக்கப்பட்டது மற்றும் அதிகாரத்துவமானது. சமுர்த்தி வங்கிகள் அல்லது தபால் அலுவலகங்கள் மூலம் குறித்த நன்மைகள் நேரடியாக விநியோகிக்கப்பட்டன. உதாரணமாக சமுர்த்தி வங்கிகள் ஊடாக சமுர்த்தி நன்மைகள் விநியோகிக்கப்பட்டன. இந்த செயன்முறை திறமையற்றது மற்றும் குறிப்பிடத்தக்க நேரத்தையும் பணத்தையும் விரயமாக்கும் செயற்பாடாகும்.

LIRNEasia முன்னெடுத்த கணக்கெடுப்பில், இலங்கையின் சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 25% சமுர்த்தி திணைக்களம் மற்றும் அதிகாரசபையின் செயற்பாட்டுச் செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. வினைத்திறனற்ற இந்தச் செயற்பாட்டினை நிவர்த்தி செய்வதற்காக, உலக வங்கியின் ஆதரவுடன், இலங்கையின் சமூக பாதுகாப்பு திட்ட அமைப்பின் செயற்திறனை டிஜிட்டல் மயமாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் நலன்புரி நன்மை வாரியம் ஒரு திட்டத்தைத் தொடங்கியது. ஒரு வெளிப்படையான ஒருங்கிணைந்த நலன்புரி முகாமைத்துவ மத்திய தரவுத்தளத்தை உருவாக்குவது இதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். பின்னர் இது நலன்புரி நன்மை தகவல் கட்டமைப்பு என்றழைக்கப்பட்டது. (WBIB).

நலன்புரி நன்மை தகவல் கட்டமைப்பானது, வறுமையை அளவிடுவதற்கு பல பரிமாண வறுமை மதிப்பீட்டைப் பயன்படுத்துகின்றது. இந்த மதிப்பீட்டிற்கான வினாக்கொத்தினை, தொகைமதிப்பு புள்ளவிபரத் திணைக்களம் வடிவமைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. டிஜிட்டல் முறைக்கான இந்த நகர்வு, பயன்பாடு மற்றும் விநியோக செயன்முறைகளை நெறிப்படுத்துதல், செயற்பாட்டுச் செலவுகளைக் குறைத்தல் மற்றும் பலன்கள் மிகவும் தகுதியான நபர்களை விரைவாகவும் திறமையாகவும் சென்றடைவதை உறுதிசெய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 2. 2. அமுலாக்கமும் முக்கிய அம்சங்களும்

## *தகுதிக்கான அளவுகோல்கள் மற்றும் நன்மைகள்*

அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு உதவியை, மிகவும் தகுதியானவர்களும் குடும்பங்களும் மாத்திரம் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்வதற்கு, குறிப்பிட்ட தகுதிக்கான அளவுகோல்களைக் கொண்டுள்ளது. திட்டத்தின் விரிவான மதிப்பீட்டு செயன்முறையானது விண்ணப்பதாரரின் நிதி நிலையைப் பற்றிய தெளிவான விபரத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளதோடு, பலன்கள் எவ்வாறு இலக்குவைக்கப்படுகின்றன என்பதை மேம்படுத்த இது உதவுகிறது.

## *தெரிவுசெய்யும் செயன்முறை*

அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு திட்டத்திற்கான தெரிவு செயல்முறையானது, விரிவானது மற்றும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது. உண்மையிலேயே தேவையுள்ளோருக்கு மாத்திரம் பலன்களைப் பெற்றுக்கொடுப்பதை உறுதிசெய்யும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தகுதியானவர்களா என்பதை மதிப்பிடுவதற்கு, இச்செயன்முறையானது விரிவான அளவுகோல்கள் மற்றும் குறிகாட்டிகளைப் பயன்படுத்துகின்றது. தெரிவு செயன்முறையின் முக்கிய அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

1. **அளவுகோல்களும் குறிகாட்டிகளும்:** இந்தத் திட்டம் ஆறு முக்கிய அளவுகோல்களைப் பயன்படுத்துகிறது. ஒவ்வொரு அளவுகோலும் ஒருவர் எவ்வளவு பற்றாக்குறையை அனுபவிக்கின்றார் என்பதை அளவிட குறிப்பிட்ட குறிகாட்டிகளைக் கொண்டுள்ளது. கல்வி, சுகாதாரம், பொருளாதார நிலை, சொத்துகள், வீட்டு நிலைமை மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை ஆகியவை இந்த அளவுகோல்களில் அடங்கும். ஒவ்வொரு அளவுகோலுக்கும் மதிப்பெண் வழங்கப்படுகின்றது.

   - **கல்வி:** குடும்ப உறுப்பினர்களின் அதிகூடிய கல்வி நிலை மற்றும் 5-16 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்கின்றனரா என்பன இந்தக் குறிகாட்டிகளில் உள்ளடங்கும்.

   - **சுகாதாரம்:** குடும்ப உறுப்பினர்களுக்கு நீண்டகால நாட்பட்ட நோய்கள் அல்லது குறைபாடுகள் உள்ளனவா என்பதை இந்தக் குறிகாட்டிகள் மதிப்பிடுகின்றன.

   - **பொருளாதார நிலை:** தனிநபரின் மாதாந்த வருமானம், செலவு மற்றும் மின்சார நுகர்வு ஆகியவற்றை இந்தக் குறிகாட்டிகள் அளவிடுகின்றன.

- **சொத்துக்கள்:** சொந்தமான வீடு, நிலம், வாகனங்கள் மற்றும், உங்கள் நடமாட்டம் பொருளாதார செயற்பாடு மற்றும் வாழ்வாதாரம் தொடர்பான ஏனைய சொத்துக்களின் உரிமை தொடர்பாக இந்த அளவுகோல் மதிப்பிடுகின்றது.

- **வீட்டு நிலைமை:** வீட்டின் வகை, கட்டுமானப் பொருட்கள், மொத்த நிலப்பரப்பின் அளவு மற்றும் சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை பெற்றுக்கொள்ளும் தன்மை ஆகியன இந்த குறிகாட்டிகளில் உள்ளடங்கும்.

- **குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை:** சார்ந்திருப்பவர்களின் விகிதத்தையும், குடும்பம் ஒற்றைப் பெற்றோர் குடும்பமா என்பதையும் இந்த அளவுகோல் சரிபார்க்கிறது.

2. **கணக்கிடும் முறை:** ஒவ்வொரு குறிகாட்டிக்கும் மதிப்பெண் வழங்கப்படும். அதிக மதிப்பெண் என்றால் அங்கு அதிக பற்றாக்குறை உள்ளதென அர்த்தப்படும். அனைத்து குறிகாட்டிகளிலிருந்தும் பெறப்படும் மதிப்பெண்களை ஒன்றாகச் சேர்ப்பதன் மூலம் மொத்த பற்றாக்குறை மதிப்பெண் கணக்கிடப்படும். மதிப்பிடப்பட்ட பற்றாக்குறை மதிப்பெண் 0 முதல் 1 வரை இருக்கும், இதில் மதிப்பெண் 1 என்பது அதிக அளவிலான பற்றாக்குறையைக் காட்டுகிறது.

3. **தெரிவிற்கான தகுதி வரம்பு:** தெரிவிற்கான தகுதி வரம்பு புள்ளி, மாவட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ளது. இது குடும்ப வருமானம் மற்றும் செலவின கணக்கெடுப்பின் மூலம் அடையாளம் காணப்பட்ட பின்தங்கிய குடும்பங்களின் விகிதத்தை அடிப்படையாகக் கொண்டது. நாடு முழுவதிலும் உள்ள பற்றாக்குறையுடன் ஒத்துப்போகும் வகையில் பலன்கள் வழங்கப்படுவதை இது உறுதி செய்கிறது.

4. **குறிப்பிட்ட செயற்திட்டங்களுக்கு தகுதிபெறல்:** இத்திட்டத்தில் பல்வேறு நலத்திட்டங்கள் உள்ளன. இது குடும்பங்கள், 70 வயதுக்கு மேற்பட்டவர்கள், குறைபாடுகள் உள்ளவர்கள் மற்றும் நாட்பட்ட சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு வழங்குகின்றது. இந்தத் திட்டங்களுக்கான தகுதியானது கணக்கிடப்பட்ட பற்றாக்குறை மதிப்பெண் மற்றும் ஒவ்வொரு திட்டத்திற்கும் தொடர்புடைய குறிப்பிட்ட அளவுகோல்களால் தீர்மானிக்கப்படுகிறது.

   - **குடும்பங்கள்:** வெவ்வேறு அளவுகளைக் கொண்ட குடும்பங்களுக்கு வெவ்வேறு அளவுகளுடன், குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நன்மைகள் வழங்கப்படுகின்றன.

   - **முதியோர்:** 70 வயதிற்கு மேற்பட்டவர்கள் மாதாந்த கொடுப்பனவை பெற்றுக்கொள்கின்றனர்.

   - **இயலாமையுடையோர்:** தகுதி பெறுவதற்கு, இனங்காணக்கூடிய இயலாமை அல்லது மருத்துவ சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். தகுதி இருந்தால், அவர்கள் மாதாந்த கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வர்.

   - **நாட்பட்ட சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்கள்:** நாட்பட்ட சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சான்றளிக்கப்பட்டவர்கள், மாதாந்த உதவித்தொகையை பெற்றுக்கொள்வர்.

## *நடைமுறைப்படுத்தலும் கண்காணிப்பும்*

அஸ்வெசும நலன்புரி நன்மைத் திட்டம், பயனுள்ள மற்றும் வெளிப்படையானது என்பதை உறுதி செய்வதற்காக தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டில் அது கவனம் செலுத்துகிறது. குடும்ப வருமானம் மற்றும் செலவுக் கணக்கெடுப்பில் இருந்து புதுப்பிக்கப்பட்ட தரவைப் பயன்படுத்தி அளவுகோல்கள் மற்றும் குறிகாட்டிகளின் வழக்கமான மதிப்பாய்வு இதில் அடங்கும். தெரிவிற்கான தகுதி வரம்பு புள்ளிகளில் சரிசெய்தல் தேவைக்கேற்ப மேற்கொள்ளப்படுகின்றது. பயனாளிகளிடமிருந்து விடயங்களைச் சேகரிக்கவும், ஏதேனும் சிக்கல்கள் காணப்படுமாயின் அவற்றை விரைவாகத் தீர்க்கவும் பின்னூட்ட வழிமுறைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

## *நலன்புரி நன்மைகள் வாரியம் மற்றும் அதன் செயற்பாடுகள் பற்றிய அறிமுகம்*

இலங்கையின் நலன்புரி நன்மைகள் வாரியம், 2002ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் 2016ஆம் ஆண்டு ஜுலை மாதம் நிறுவப்பட்டது. 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மீள செயற்படுத்தப்பட்ட இந்தச் சட்டமானது, நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கான சட்ட கட்டமைப்பை வழங்குகின்றது. அத்தோடு, நன்மை பெறுநர்களைக் கண்டறிவதற்கும் தேவைப்படும்போது பலன்களை நிறுத்துவதற்கும் வெளிப்படையான செயல்முறையை இது உறுதி செய்கிறது.

## *நோக்கமும் குறிக்கோள்களும்*

இலக்குவைக்கப்பட்ட பல்வேறு நன்மைகள் திட்டங்களுக்கு பயனாளிகளைத் தெரிவுசெய்வதில் வெளிப்படைத்தன்மையையும் சமத்துவத்தையும் உறுதிப்படுத்தும் ஒரு ஒத்திசைவான நலன்புரி நன்மைகள் முகாமைத்துவ கட்டமைப்பை உருவாக்கி செயற்படுத்துவதே நலன்புரி நன்மைகள் வாரியத்தின் நோக்கமாகும். இதன் பிரதான குறிக்கோள்கள் பின்வருமாறு -

1. **சட்ட கட்டமைப்பினை வழங்குதல்:** நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கான ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பை அமைத்தல்.

2. **நன்மை பெறுநரின் அடையாளத்தில் வெளிப்படைத்தன்மை:** நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நன்மைகளைப் பெறத் தகுதியானவர்களைக் கண்டறியும் செயன்முறைகளை செயற்படுத்துதல்.

3. **பலன்களை நிறுத்துவதற்கான ஏற்பாடுகள்:** தேவைப்படும் போது பலன்களை நிறுத்துவதற்கான தெளிவான வழிகாட்டுதல்களை உருவாக்குதல்.

## *முக்கிய செயற்பாடுகள்*

நலன்புரி நன்மைகள் வாரியமானது, அதன் நோக்கங்களை அடைவதற்காக பல்வேறு முக்கிய செயற்பாடுகளை மேற்கொள்கின்றது :

1. **நலன்புரி நலத்திட்டங்களை செயற்படுத்துதல்:** சமுர்த்தி, முதியோர் உதவித்தொகை, இயலாமையுடையோருக்கான கொடுப்பனவு மற்றும் நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவு போன்ற பல்வேறு நலத்திட்டங்களை நிறுவி நிர்வகித்தல்.

2. **அதிகாரப் பிரதிநிதித்துவம்:** மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள் அல்லது ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கு குறிப்பிட்ட அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளை வழங்குதல்.

3. **தகுதிபெறுவதற்கான அளவுகோல்களை உருவாக்குதல்:** நலன்புரி நன்மைகளை பெற்றுக்கொள்ள தகுதியானவர்களை தீர்மானிப்பதற்கான அளவுகோல்களை உருவாக்கி செயற்படுத்துதல்.

4. **நிதி ஒதுக்கீடுகள்:** பல்வேறு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை தீர்மானித்தல், நிதி திறமையாகவும் திறம்படவும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.

5. **கண்காணிப்பும் மதிப்பீடும்:** நலத் திட்டங்களின் தாக்கத்தை மேம்படுத்தவும், பயனாளிகளைத் தெரிவுசெய்வதில் ஏற்படும் தவறுகளை குறைப்பதற்கும், அவற்றின் செயற்திறனைத் தொடர்ச்சியாக கண்காணித்து மதிப்பீடு செய்தல்.

## *மேலோட்டமும் தாக்கமும்*

இலங்கையில் நலன்புரி திட்டங்களின் நேர்மை, செயற்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்கான ஒரு முக்கியமான படியாக நலன்புரி நன்மைகள் வாரியம் காணப்படுகின்றது. ஒருங்கிணைந்த நலன்புரி முகாமைத்துவ கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம், நலன்புரி நன்மைகள் வாரியமானது, நலன்புரி விநியோகத்தில், குறிப்பாக சமுர்த்தித் திட்டத்தில், சமூக நலச் சேவைகளின் அணுகல் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதில் உள்ள தவறுகளை சரிசெய்தல் மற்றும் விலக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## *செயற்திறனும் சவால்களும்*

சமுர்த்தி திட்டத்தில் காணப்படும் சில திறமையின்மைகளை சரிசெய்வதற்கு உதவுவதன் மூலம் நலன்புரி உதவிகள் எவ்வாறு இயக்கப்படுகின்றன என்பதை மேம்படுத்துவதில் அஸ்வெசும திட்டம் முன்னேற்றம் கண்டுள்ளது. எனினும், இத்திட்டம் குறிப்பிட்ட சில சவால்களை எதிர்கொண்டுள்ளது. பயனாளிகளைத் தெரிவுசெய்வது தொடர்பாக கிடைக்கும் அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகளும் ஆட்சேபனைகளும் இந்த முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக காணப்படுகின்றது. இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, 1,028,885 முறைப்பாடுகளையும் 134,540 ஆட்சேபனைகளையும் பெற்றுள்ளது. இது ஆரம்பகட்ட தெரிவில் காணப்படும் சாத்தியமான குறைபாடுகளை எடுத்துக்காட்டுகின்றது. இதற்கு மேலதிகமாக, பலன்களை வகைப்படுத்துவதில் உள்ள முரண்பாடுகள் பற்றிய கரிசனைகள் காணப்படுகின்றன. பல குடும்பங்கள் தமக்கு அதிக நன்மைகளை அளிக்கும் வகைக்குள் நுழைய வேண்டுகோள் விடுக்கின்றன.

பயனாளிகள் மதிப்பிடப்பட்டு தெரிவுசெய்யப்படுவதில் தொடர்ந்து முன்னேற்றங்கள் தேவை என்பதை இந்தச் சவால்கள் சுட்டிக்காட்டுகின்றன. செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த செயற்திறனை மேம்படுத்த தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வில் வெளிப்படைத்தன்மை மற்றும் துல்லியத்தை உறுதி செய்வது அவசியம்.

## *பயனாளிகளின் கருத்துக்கள்*

ரைட் டு லை.ஃப் மனித உரிமைகள் நிலையத்தின் கணக்கெடுப்பில், இலங்கையில் சமூக பாதுகாப்பு திட்டங்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பது பற்றிய முக்கியமான தகவல்களை, குறித்த நன்மைகளைப் பெறுபவர்களின் கருத்துக்கள் வழங்குகின்றன. ஏராளமான பயனாளிகள் (35%) இச்செயற்திட்டம் தொடர்பாக அதிருப்தியை வெளிப்படுத்தினர். குறிப்பாக, போதிய பலன்கள் மற்றும் அதிகாரத்துவ தாமதங்கள் போன்ற பிரச்சனைகளைக் குறிப்பிட்டனர். மறுபுறம், 17.9%

பயனாளிகள் மிகவும் திருப்தி அடைந்துள்ளதாகவும், 3.6% பேர் உதவியில் முழுமையாக திருப்தி அடைந்துள்ளதாகவும் தெரிவித்தனர். வழங்கப்பட்ட நிதியுதவியின் காரணமாக அவர்களின் வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சமூகப் பாதுகாப்பு செயற்திட்டங்கள் பல்வேறு பயனாளர்களுக்கு பயனளிக்கும் அதே வேளையில், இன்னும் முன்னேற்றத்திற்கான இடம் உள்ளது என்பதையே கருத்துக்கள் எடுத்துக்காட்டுகின்றன. அதிருப்தியடைந்த பயனாளிகள் குறிப்பிடும் கரிசனைகளை நிவர்த்தி செய்வது, நன்மைத் தொகைகளை அதிகரிப்பது மற்றும் விண்ணப்ப செயன்முறையை எளிதாக்குவது போன்றவை புதிய அஸ்வெசும திட்டத்தின் வெற்றிக்கு இன்றியமையாததாக இருக்கும்.

அஸ்வெசுமா நலன்புரி நன்மைகள் திட்டமானது, சமூக நலனை மேம்படுத்துவதற்கும் வறுமையைக் குறைப்பதற்கும் இலங்கை முன்னெடுக்கும் முயற்சிகளில் ஒரு முக்கிய முன்னேற்றமாகும். துல்லியமான இலக்கு மற்றும் முழுமையான ஆதரவில் கவனம் செலுத்துவதன் மூலம், மிகவும் மீண்டெழும் தன்மை கொண்ட மற்றும் தன்னிறைவு பெற்ற மக்களை உருவாக்குவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், தற்போதுள்ள சவால்களை எதிர்கொள்ளவும், திட்டமானது அதன் இலக்குகளை திறம்பட அடைவதை உறுதி செய்யவும் தொடர்ச்சியான மதிப்பீடுகளும் மேம்பாடுகளும் தேவைப்படுகின்றன.

## குறிப்புரைகள்


"WBB Annual Report 2020." *Welfare Benefits Board Annual Report 2020,* Welfare Benefits Board, Ministry of Finance, Economic Stabilization & National Policies, 2020.

"WBB Annual Report 2021." *Welfare Benefits Board Annual Report 2021,* Welfare Benefits Board, Ministry of Finance, Economic Stabilization & National Policies, 2021.

"Welfare Benefits Act No. 24 of 2002." *Gazette Extraordinary of the Democratic Socialist Republic of Sri Lanka,* No. 1952/22, 2 Feb. 2016.

"Welfare Benefits Act, No. 24 of 2002," *Gazette Extraordinary of the Democratic Socialist Republic of Sri Lanka,* No. 2117/55, April 5, 2019.

"The Effectiveness of Aswesuma Welfare Benefit Scheme Preliminary Findings and Ongoing Assessments." *The Effectiveness of Aswesuma Welfare Benefit Scheme Preliminary Findings and Ongoing Assessments,* Right to Life Human Rights Centre, Nov. 2023.

அத்தியாயம் 4

# சமூக பாதுகாப்புத் திட்டங்கள் தொடர்பாக, ரைட் டு லைப் மனித உரிமைகள் நிலையம் நடத்திய மதிப்பாய்வின் அறிமுகம்

இலங்கையில் நிலவும் பாதிப்புகள் மற்றும் ஏற்றத்தாழ்வுகளை மோசமாக்கும் சிக்கலான நெருக்கடியைச் சமாளிப்பதற்கு, இலங்கையில் சமூக பாதுகாப்பு திட்டங்கள் பற்றிய விரிவான அடிப்படை மதிப்பாய்வு ஒன்றினை ரைட் டு லைஃப் மனித உரிமைகள் நிலையம் நடத்தியது. 2023ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நடத்தப்பட்ட இந்த மதிப்பாய்வானது, இலங்கையின் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சமூக பாதுகாப்புத் திட்டங்களின் வரம்பு, தகுதி அளவுகோல்கள், போதுமான தன்மை மற்றும் செயற்திறன் ஆகியவற்றின் விரிவான மதிப்பீட்டை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ரைட் டு லைப் கணக்கெடுப்பின் முக்கிய குறிக்கோள்கள், தற்போதைய சமூக பாதுகாப்புத் திட்ட கட்டமைப்பில் உள்ள இடைவெளிகளையும் சிக்கல்களையும் கண்டறிவதாகும். இது பயனாளிகளின் தேவைகள் மற்றும் அனுபவங்கள் பற்றிய தரவுகளை சேகரிப்பதை நோக்கமாகக் கொண்டது. பாதிக்கப்படக்கூடிய மக்களின் தேவைகளை சிறப்பாகப் பூர்த்தி செய்வதற்காக இந்த பாதுகாப்பு திட்டங்களை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை உருவாக்கவும் இந்த கணக்கெடுப்பு நோக்கமாக கொண்டுள்ளது. ஆய்வின் கண்டுபிடிப்புகள் ஆதாரங்களின் அடிப்படையில் கொள்கைகளை உருவாக்கவும் திட்டங்களை மேம்படுத்தவும் உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இது ஒரு நியாயமான மற்றும் சமத்துவமான சமூகத்திற்கு பங்களிக்கும்.

2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 17 மாவட்டங்களிலும் 74 பிரதேச செயலகங்களிலும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இது 1,092 பேரை (ஜனசவிய, சமுர்த்தி மற்றும் அஸ்வெசும போன்ற முக்கிய சமூக பாதுகாப்பு திட்டங்களின் பயனாளிகள்) உள்ளடக்கியது மற்றும் தகவல்களை சேகரிக்க கலப்புமுறை அணுகுமுறை பயன்படுத்தப்பட்டது. கட்டமைக்கப்பட்ட வினாக்களைப் பயன்படுத்தி அளவறிரீதியான தரவுகள் சேகரிக்கப்பட்டன. வழிகாட்டல் நேர்காணல்கள் மற்றும் குழு கலந்துரையாடல்களில் இருந்து தரவு அடிப்படையிலான விடயங்கள் சேகரிக்கப்பட்டன. இந்த வலுவான முறையானது இலங்கையில் சமூக பாதுகாப்புத் திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் செயற்திறன் பற்றிய முழுமையான புரிதலைப் பெற்றுக்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நடைமுறை கொள்கை பரிந்துரைகளை உருவாக்குவதற்கான அடிப்படையை இது வழங்கியது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது பாதிக்கப்படக்கூடிய மக்கள் மீது இந்தத் திட்டங்களின் வரம்பு, தகுதி அளவுகோல்கள், போதுமான அளவு மற்றும் தாக்கத்தை மதிப்பிடுவதை இந்த மதிப்பாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.

### பதில் வழங்கியவர்களின் விபரக்குறிப்பு

- இந்த கணக்கெடுப்பில் இலங்கையின் பல்வேறு மக்கள் பிரிவினரை உள்ளடக்கும் வகையில், 17 மாவட்டங்கள் மற்றும் 74 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 1,092 பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர்
- பெரும்பான்மையானவர்கள் பெண்கள் (62.3%), மேலும் பெரும்பாலானவர்கள் 35 முதல் 65 வயதுக்கு இடைப்பட்டவர்கள்.
- இன அமைப்பை பொறுத்தவரை, 67.3% சிங்களம், 24.4% தமிழ் மற்றும் 8.1% முஸ்லிம்கள் ஆவர். பதிலளித்தவர்களில் பெரும்பாலானவர்கள் பௌத்தர்கள் (64.35%) என அடையாளம் காணப்பட்டுள்ளது.
- குடும்ப உறுப்பினர்களின் சராசரி எண்ணிக்கை 5 ஆகும்.

**முக்கிய கண்டுபிடிப்புகள்**

## *1. பொருளாதார நிலையும் வருமானம் பெறும் வழியும்*

- பதிலளித்தவர்களில் கணிசமான எண்ணிக்கையினர், (70.4%) மாத வருமானம் ரூ. 10,000 முதல் ரூ. 20,000 வரை இருப்பதாகக் கூறியுள்ளனர். அவர்கள் குறைந்த வருமானம் கொண்ட குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதை இது காட்டுகின்றது.

- நாட்கூலி மற்றும் (58.1%) மற்றும் சுயதொழில்வாய்ப்பு (20.7%) என்பன பிரதான வருமான மார்க்கங்கள் ஆகும்.

## *2. குடியிருப்புகளின் இயல்பு*

- பதிலளித்தவர்களில் கணிசமான எண்ணிக்கையினர் (32.1%) தமது சொந்த நிலத்தில் வாழ்கின்றனர். இது அவர்களுக்கு பாதுகாப்பான நில உரிமை இருப்பதைக் காட்டுகின்றது.

- மேலும் 20.4% பேர் அரச உரிமம் பெற்ற நிலத்தில் வாழ்கின்றனர். அரச அனுமதியுடன் நிலத்தைப் பயன்படுத்துகின்ற போதும், அது முழுமையாக அவர்களுக்கு சொந்தமில்லை.

- பதிலளித்தவர்களில் 11.3 வீதமானோர், உரிய நில உரிமை ஆவணங்கள் இன்றி வாழ்கின்றனர். அவர்கள் எந்நேரத்திலும் வெளியேற்றும் அபாயத்தை கொண்டிருப்பதையும் சட்டப் பாதுகாப்பு இல்லாத தன்மையையும் இது எடுத்துக்காட்டுகிறது.

- பதிலளித்தவர்களில் கணிசமான எண்ணிக்கையினர் (58.6%) ஒற்றைக் குடும்ப வீடுகளில் வாழ்கின்றனர். இது, பெரும்பாலான மக்கள் தமக்கான சொந்த தனி வீடுகளைக் கொண்டுள்ளதை காட்டுகின்றது. பதிலளித்தவர்களில் மேலும் 29% பேர் இரு குடும்பங்கள் பகிர்ந்து கொள்ளும் வீடுகளில் வசிக்கின்றனர். இது, பல குடும்பங்கள் ஒன்றாக வசிக்கும் வீடுகளில் பலர் வாழ்வதைக் குறிக்கின்றது. வீட்டிற்கான பற்றாக்குறை அல்லது பொருளாதார பிரச்சினைகள் இதற்கு காரணமாக இருக்கலாம் என்பதை இது குறிப்பிடுகின்றது.

## *3. வாகன உரிமம்*

- மக்கள் தொகையில் 30.4% பேர் தமக்குச் சொந்தமான வாகனத்தை வைத்துள்ளனர். 69.6% பேர் தம்மிடம் வாகனம் இல்லையென குறிப்பிட்டுள்ளனர்.

- வாகனம் வைத்திருப்பவர்களில், 51.2% பேர் மோட்டார் சைக்கிள் வைத்துள்ளனர். இது மோட்டார் சைக்கிள்களை சமூகத்தில் மிகவும் பொதுவான வகை வாகனமாக காட்டுகின்றது. இதற்கு மேலதிகமாக, 22.5% பேர் சைக்கிள்களையும், 21.7% பேர் முச்சக்கர வண்டிகளையும் வைத்துள்ளனர்.

## *4. வங்கிக் கணக்குகள்*

- மதிப்பாய்வில் பங்கேற்றவர்களில் 86 வீதமானோர் வங்கிக் கணக்கினை வைத்துள்ளனர்.

- 30.6% பேர் மட்டுமே வங்கியிலோ அல்லது வேறு வகையான சேமிப்புகளிலோ சேமிப்பு உள்ளதாக கூறினர்.

- சேமிப்புக் கணக்கினை வைத்திருப்பவர்களில் 85.1% பேர், தமது சேமிப்பு அளவு 10,000 ரூபாய் அல்லது அதற்கும் குறைவாக உள்ளதாகக் குறிப்பிட்டனர்.

- 13.2% பேர் தமது சேமிப்பு அளவானது 10,000 ரூபாய் தொடக்கம் 100,000 ரூபாய் வரை உள்ளதெனக் குறிப்பிட்டனர்.

- 1.1% பேர் தமது சேமிப்பானது 100,000 ரூபாய் தொடக்கம் 1,000,000 ரூபாய் வரை உள்ளதெனக் குறிப்பிட்டனர்.

## *5. வறுமை நிவாரணத்தை பெற்றுக்கொண்ட காலப்பகுதி*

- மதிப்பாய்வில் பங்கேற்ற 23.2% பேர், 10 வருடங்களுக்கு மேலாக அரச மானியங்களை பெற்று வருகின்றனர்.

- 11% வீதமானோர், தமக்கு எவ்வித அரச மானியங்களும் கிடைக்கவில்லையென குறிப்பிட்டனர்.

- சராசரியாக 69.2 வீதமானோர், தாம் கொவிட்-19 நிவாரணத்தை பெற்றுக்கொண்டதாகக் குறிப்பிட்டனர். (5000 ரூபா பணம் அல்லது தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட உலர் உணவுப்பொதி)

## 6. *மதிப்பாய்வில் பங்குபற்றியோர் தற்போது பெற்றுக்கொள்ளும் மானியங்கள்*

- மதிப்பாய்வில் பங்கேற்றவர்களில் 33.7% பேர் தற்போது சமுர்த்தி நன்மையைப் பெறுகின்றனர்.
- மதிப்பாய்வில் பங்கேற்றவர்களில் 33.3% பேர் தற்போது அஸ்வெசும மானியத்தைப் பெறுகின்றனர். (மதிப்பாய்வினை நடத்தும்போது இரண்டு செயற்திட்டங்களும் நடைமுறையில் இருந்தன).
- மதிப்பாய்வில் பங்கேற்றவர்களில் 19.4% பேர் முதியோருக்கான கொடுப்பனவை பெறுகின்றனர்.
- மதிப்பாய்வில் பங்கேற்றவர்களில் 3.6% பேர் இயலாமையுடையோருக்கான கொடுப்பனவை பெறுகின்றனர்.
- மதிப்பாய்வில் பங்கேற்றவர்களில் 4% பேர் நாட்பட்ட நோய்களுக்கான மானியத்தைப் பெறுகின்றனர்.
- மதிப்பாய்வில் பங்கேற்றவர்களில் 2.1% பேர் எவ்வித மானியத்தையும் பெறவில்லை எனக் குறிப்பிட்டனர்.

## 7. *அஸ்வெசும செயற்திட்டத்திற்கான விண்ணப்பம்*

- மதிப்பாய்வில் கலந்துகொண்டவர்களில் பெரும்பகுதியினர், அதாவது 83.7 வீதமானோர் அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டத்திற்கு விண்ணப்பத்துள்ளனர்.
- மதிப்பாய்வில் கலந்துகொண்டவர்களில் 9.1 வீதமானோர் தாம் அஸ்வெசும திட்டத்தினை பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கவில்லை எனக் குறிப்பிட்டனர். விண்ணப்பித்தவர்களுடன் நோக்குகையில், ஒப்பீட்டளவில் இது சிறியளவான வீதமாகும்.
- மதிப்பாய்வில் கலந்துகொண்டவர்களில் 7.2 வீதமானோர், தாம் இத்திட்டம் தொடர்பாக அறிந்திருக்கவில்லை எனக் குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## 8. *பயனாளர்களின் திருப்தி*

- 29.2 வீதமானோர் தமது வாழ்க்கைத் தரத்தில் பெரிதாக முன்னேற்றம் ஏற்படவில்லை எனக் குறிப்பிட்டனர்.
- 28.9 வீதமானோர் தமது வாழ்க்கைத் தரத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை எனக் குறிப்பிட்டனர்.
- 2.1 வீதமானோர் தமது வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டனர்.

**முடிவு**

இலங்கையில் பாதிப்பை எதிர்கொள்ளக்கூடிய மக்களுக்கு சிறந்த முறையில் உதவுவதற்கு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை மேம்படுத்தப்பட வேண்டிய முக்கிய பகுதிகளை இந்த அடிப்படை மதிப்பாய்வு சுட்டிக்காட்டியது.

"எனது குடும்பத்தில் 10 பேர் உள்ளனர். எமக்கு எட்டு பிள்ளைகள் உள்ளதோடு, மூத்தவருக்கு 19 வயது, இளையவருக்கு இரண்டு வயதாகின்றது. ஒருவருக்கும் தொழில் இல்லை. அறிவுசார் திறனில் இயலாமையுடைய என் கணவர் சாதாரண தொழிலாளியாக வேலைசெய்கின்றார். பிள்ளைகளை பராமரிப்பதால் என்னால் தொழில்செய்ய முடியாது. நாம் மிகவும் ஏழ்மையான நிலையில் உள்ளோம். போதிய வீட்டு வசதி இல்லை. எமக்கு ஒருபோதும் சமுர்த்தி கொடுப்பனவு கிடைக்கவில்லை. அஸ்வெசுமவிற்கும் விண்ணப்பிக்கவில்லை. காரணம், அது பற்றி எமக்கு யாரும் கூறவில்லை. எமது வீட்டில் வானொலியே தொலைக்காட்சியோ இல்லை."

அமராவதி (பெயர் மாற்றப்பட்டுள்ளது), இல்லத்தரசி, மாத்தறை

அத்தியாயம் 5

# இலங்கையின் சமூக பாதுகாப்புத் திட்டங்களில் காணப்படும் சவால்கள்

### 1. உள்ளடக்கம் மற்றும் இலக்குவைக்கப்படுவதில் உள்ள சிக்கல்கள்

*சேர்த்தல் மற்றும் விலக்குதலில் ஏற்படும் பிழைகள்*

இலங்கையின் சமூக பாதுகாப்புத் திட்டங்களில் காணப்படும் பாரிய சவால்களில் ஒன்றாக, சேர்த்தல் மற்றும் விலக்கதலில் ஏற்படும் பிழைகள் காணப்படுகின்றன. தகுதியானவர்கள் தவறுதலாக வெளியேறும்போது (விலக்குதல் பிழைகள்) அல்லது தகுதியற்றவர்கள் பலன்களைப் பெறும்போது (சேர்த்தல் பிழைகள்) இந்தப் பிழைகள் நிகழ்கின்றன. உதாரணமாக, அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டம், சிறந்த இலக்கினை நோக்காகக் கொண்டுள்ள போதிலும், குறிப்பிடத்தக்க சேர்த்தல் மற்றும் விலக்குதல் பிழைகளைக் கொண்டுள்ளது. கிடைக்கப்பெற்றுள்ள அதிக எண்ணிக்கையிலான மேன்முறையீடுகளும் ஆட்சேபனைகளும் இப்பிரச்சனைகளை சுட்டிக்காட்டுகின்றன. பயனாளிகள் பலர் தாம் தவறாக வகைப்படுத்தப்பட்டுள்ளதாக அல்லது அதிக நன்மைகளை பெறும் வகைகளில் இருந்து விலக்கப்பட்டுள்ளதாக கூறுகின்றனர். இந்த பிழைகள், உண்மையான தேவை உள்ளவர்களுக்கு உதவாமல் மற்றும் தகுதியற்ற நபர்களுக்கு வளங்களை வீணடிப்பதன் மூலம் சமூக நலத் திட்டங்களின் செயற்திறனை பலவீனப்படுத்துகின்றது.

ரைட் டு லை.:.ப் மனித உரிமைகள் நிலையத்தின் அடிப்படைக் கருத்துக்கணிப்பு மற்றும் குழு கலந்துரையாடலின் போது பதிலளித்த பலர், விண்ணப்ப செயன்முறை குறித்து குழப்பமான பதிலையே தெரிவித்தனர். தாம் விண்ணப்பிக்க வேண்டுமென தெரியாது என்றும், அதிகாரிகள் தமது வீடுகளுக்கு சமூகமளிக்கவில்லை அல்லது மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணியாளர்களால் தவறான தகவல்கள் பதிவு செய்யப்பட்டமை போன்ற கரிசனைகளை மக்கள் வெளிப்படுத்தினர்.

மொழி ரீதியான தடைகள், குறிப்பாக தமிழ் பேசும் சமூகங்களில், தரவு சேகரிப்பின் துல்லியம் மற்றும் செயல்திறன் பற்றிய கரிசனைகளை எழுப்பியது. பயனாளர்களின் பட்டியல் ஆரம்பத்தில் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டன. பலர் தமது பெயர்களை கண்டுபிடிப்பதற்கு குறித்த பட்டியலை வாசிக்க முடியவில்லை எனத் தெரிவித்தனர்.

தெரிவுகள் சரியா தவறா என்பது குறித்து ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய விரும்பவில்லை என்று சிலர் தெரிவித்தனர். அவர்கள் தகுதியுடையவர்கள் என்று நம்பியதால், பயனாளிகள் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்பினர்.

*புவியியல் மற்றும் மக்கள்தொகை வேறுபாடு*

இலங்கையில் சமூக பாதுகாப்புத் திட்டங்களை திறம்பட அடைவதற்கும் இலக்கு வைப்பதற்கும், புவியியல் மற்றும் மக்கள்தொகை வேறுபாடுகள் சவால்களை உருவாக்குகின்றன. கிராமப்புற மற்றும் தொலைதூரத்தில் காணப்படும் பிரதேசங்கள், பெரும்பாலும் சமூக நலத் திட்டங்களை அணுகுவதில் சிரமப்படுகின்றன. தளவாடத் தடைகள், உள்கட்டமைப்பு இல்லாமை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட தகவல்தொடர்பு என்பன இதற்குக் காரணமாகும். இதற்கு மேலதிகமாக, இன ரீதியில் சிறுபான்மையாக உள்ள மக்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் போன்ற சில குழுக்கள், நலன்புரி நலன்களை அணுகுவதை கடினமாக்கும் கட்டமைக்கப்பட்ட நியாயமற்ற விடயங்களை எதிர்கொள்ளலாம்.

ரைட் டு லை.:.ப் மனித உரிமைகள் நிலையத்தின் அடிப்படை மதிப்பாய்வின் போது, 7.2 விதமானோர் மானியத் திட்டம் பற்றி தமக்குத் தெரியாது என்று கூறியுள்ளனர். அஸ்வெசும செயற்திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதற்கு அரசாங்கம் முயற்சித்த போதிலும், நன்மைகள் தேவைப்படும் அனைவரும் பதிவு செய்திருக்க முடியாது என்பதை ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது.

பல்வேறுபட்ட தொடர்பாடல் உத்திகள் இருந்தபோதிலும், இந்தத் திட்டங்களைப் பற்றித் தெரிவிக்கவும், தேவையான விண்ணப்பப் படிவங்களை வழங்கவும் அரசாங்க அதிகாரிகளையே பலர் நம்பியிருக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில், சாத்தியமான பயனாளிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை அதிகாரிகளே பூர்த்தி செய்கின்றனர். இந்த

“அஸ்வெசும விண்ணப்பப் படிவத்தை தரவிறக்கம் செய்து விண்ணப்பிப்பதற்காக நான் முதன்முறையாக இணையத் தொடர்பாடல் நிலையமொன்றிற்குச் சென்றேன். அவர்கள் 50 ரூபாய் அறவிட்டனர். எம்மிடம் ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகள் இல்லை. எனினும், பட்டியல் வெளியிடப்பட்ட போது, பக்கத்து வீட்டிலுள்ள மகள் ஒருவர், எனது பெயரை கண்டுபிடிக்க உதவினார். அவரது குடும்ப உறுப்பினர்கள்வெளிநாட்டில் தொழில் செய்கின்றனர். அவர்களுக்கு இவ்வாறான தொழிநுட்ப ரீதியான தகவல்கள் தெரியும்.”

அனோமா (பெயர் மாற்றப்பட்டுள்ளது), மொனறாகலையைச் சேர்ந்த இல்லத்தரசி

அதிகாரிகளுடன் சிறந்த உறவினை பேணுவோருக்கு அஸ்வெசும திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமுண்டு. போதுமான சமூக இணைப்புகள் இல்லாதவர்கள் இந்தத் திட்டத்தைப் பற்றி அறிந்திருக்கவில்லை அல்லது எப்படி விண்ணப்பிப்பது என்று தெரியவில்லை.

தகுதிபெறுவதற்கான அளவுகோல்கள் பற்றி பரவிய சில தவறான தகவல்களும் சிலரைப் பதிவு செய்வதைத் தடுத்தன. தமக்குக் கிடைத்த தவறான தகவல்களால் தாம் தகுதியற்றவர்கள் என சிலர் நினைத்தனர்.

இதற்கு மேலதிகமாக, பலன்களை பெற்றுக்கொள்வதற்காக இதற்கு முன்னர் பதிவு செய்து அதில் வெற்றிபெறாதவர்கள், மீண்டும் வெற்றிபெறுவதற்கான சாத்தியமில்லை எனக் கருதி விண்ணப்பிக்கத் தயங்கினார்.

அனைத்து பிராந்தியங்களிலும் மற்றும் இலங்கையில் உள்ள அனைத்து குழுக்களிலும் உள்ள மக்கள் சமூக பாதுகாப்பு திட்டங்களை சமமாக அணுக முடியும் என்பதை உறுதிப்படுத்த இந்த வேறுபாடுகளை நிவர்த்தி செய்வது முக்கியமாகும்.

**நலன்புரி நன்மைகள் சட்டம் (2002ஆம் ஆண்டின் இலக்கம் 24)**

*பிரிவு 21*

*அரச அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் குற்றங்கள்*

21. இந்தச் சட்டத்தின் கீழ் தமது கடமைகளைச் செய்யும்போது, தவறான அல்லது பிழையான தகவல்கள் தொடர்பாக தெரிந்தோ விருப்பத்துடனோ செயற்படும் எந்தவொரு அரச அதிகாரியும் குற்றத்திற்கு ஆளாக நேரிடும். நீதவான் முன்னிலையில் சுருக்க விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவர்கள் பத்தாயிரம் ரூபா வரை அபராதம், அல்லது ஒரு வருடம் வரை சிறைத்தண்டனை அல்லது இரண்டினையும் அனுபவிக்க நேரிடும்.

*பிரிவு 22*

*தவறான கொடுப்பனவுகளை மீட்டல்*

22. சபையின் அதிகாரி அல்லது ஒரு தெரிவுக் குழுவின் உறுப்பினர், தாம் பெறும் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தின் உண்மைத் தன்மையை சரிபார்க்கத் தவறினால், இது தவறான நலன்புரிப் பலன்களுக்கு வழிவகுத்திருந்தால், அந்தத் தொகை குறிப்பிட்ட அதிகாரி அல்லது உறுப்பினரிடமிருந்து திரும்பப் பெறப்படும். இது அரசுக்கு செலுத்த வேண்டிய கடனாக கருதப்படும்.

## 2. திறமை மற்றும் நிர்வாகம்

### அதிகாரத்துவ இடையூறுகள்

இலங்கையில் சமூக பாதுகாப்புத் திட்டங்களின் திறமையான நிர்வாகத்திற்கு அதிகாரத்துவ தடைகள் பாரிய சவாலாக காணப்படுகின்றன. மோசமான தொடர்பாடல், சிக்கலான விண்ணப்ப செயன்முறைகள், நீண்ட கணக்கெடுப்பு மற்றும் ஒப்புதல் வழங்குவதற்கு எடுத்துக்கொள்ளும் காலம் மற்றும் பல்வேறு ஆவணங்கள் தேவைப்படுதல் போன்ற காரணங்கள், தகுதியானவர்களை இவ்வாறான பலன்களை பெற்றுக்கொள்ள விண்ணப்பிப்பதற்கு முட்டுக்கட்டைகளாக உள்ளன. மேலும், நெறிப்படுத்தப்பட்ட நடைமுறைகள் இல்லாததால், நன்மைகள் வழங்குவதில் தாமதம் மற்றும் திறமையின்மை ஏற்படலாம். சமூக நலத் திட்டங்களின் செயற்திறனை மேம்படுத்துவதற்கு, நிர்வாக நடைமுறைகளை இலகுபடுத்துவதும் சேவை வழங்கல் திறனை மேம்படுத்துவதும் அவசியமாகும்.

நலன்புரி நன்மைகள் சட்டம் (2002ஆம் ஆண்டின் 24ஆம் இலக்கம்), குறிப்பாக பிரிவுகள் 21 மற்றும் 22 என்பன, கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மத்தியில் கணிசமான கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. அரச அதிகாரிகள் தாம் தெரிந்துகொண்டே தவறான தகவல்களின் அடிப்படையில் செயற்பட்டால் அவர்களுக்கு அபராதம் அல்லது சிறைத்தண்டனை விதிக்கப்படும் என சட்டப்பிரிவு 21 குறிப்பிடுகின்றது. ஆவணங்களின்

ராகலையைச் சேர்ந்த முன்னாள் தோட்டத் தொழிலாளியான சண்முகம் என்பவர், கடந்த 2023 ஓகஸ்ட் 12ஆம் திகதி காலமானார். அவரது மனைவியான சிவமணி, கணவனின் கணக்கினை தனது பெயருக்கு மாற்ற முயற்சித்துள்ளார். பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், அவர் பாரிய சிரமங்களை எதிர்கொண்டார். எவ்வாறாயினும், கடந்த டிசம்பர் 19ஆம் திகதிவரை அவர் இவ்விடயத்தில் வெற்றிபெறவில்லை. 5000 ரூபாயை பெற்றுக்கொள்வதற்காக, அவர் பல்வேறு அலுவலகங்களுக்கு சுமார் பத்து தடவைகள் பயணிக்கவேண்டி ஏற்பட்டது. இது அவர் எதிர்கொண்ட அதிகாரத்துவ சவால்களை எடுத்துக்காட்டுகின்றது.

உண்மையான தன்மையை சரிபார்க்கத் தவறினால், தவறான கொடுப்பனவுகளுக்கு அவர்களே நிதி ரீதியாகப் பொறுப்பேற்க வேண்டுமென சட்டப்பிரிவு 22 குறிப்பிடுகின்றது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கங்கள் அஸ்வெசும நலன்புரி திட்டத்திற்காக தமது கடமைகளை புறக்கணித்தனர். இந்த நடவடிக்கை அரசுக்கும் பொதுமக்களுக்கும் இடையேயான தொடர்பை கடுமையாக பாதித்தது. இந்த புறக்கணிப்பானது, பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கான உதவியை சீர்குலைத்தது. மேலும், தவறான தகவல்கள் பரப்பப்படுவதற்கு வழிசமைத்ததோடு, போராட்டங்களுக்கும் அரசியல் சூழ்ச்சிக்கும் வழிவகுத்தது. இதன் எதிரொலியாக, அரசு தற்காலிக கணக்கெடுப்பாளர்களை நியமித்து, தேவையான மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த மொபைல் செயலியை பயன்படுத்தியது. எவ்வாறாயினும், இந்த புதிய செயன்முறை பொதுமக்களுக்கு அறிமுகமில்லாதது மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் இதுகுறித்து போதிய விளக்கமின்மை காணப்பட்டது. இதன் விளைவாக, சமூகத்தில் பரவலான அவநம்பிக்கை மற்றும் கோபத்திற்கு வழிவகுத்தது. இந்த சூழ்நிலை தெளிவான தகவல் தொடர்பு மற்றும் நலன்புரி திட்டங்களை நம்பகமான முறையில் செயல்படுத்துவதற்கான முக்கியமான தேவையை எடுத்துக்காட்டுகிறது. பொதுமக்களின் நம்பிக்கையைப் பேணுவதற்கும், பயனுள்ள சேவை வழங்குவதை உறுதி செய்வதற்கும் இது அவசியம்.

இந்த திட்டத்தின் நோக்கம் சிறப்பானது. இதிலிருந்து அரசியலை அகற்றுவதற்கு இது சிறந்த தருணம். ஜனசவிய மற்றும் சமுர்த்தி வேலைத்திட்டங்களில் பாரிய அரசியல் செல்வாக்கு காணப்பட்டதோடு, தெரிவுகளும் அரசியல் செல்வாக்கின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டன. இதிலிருந்து அஸ்வெசும திட்டம் விடுபட்டிருப்பது உண்மையில் பாராட்டுதலுக்குரியது.

எனினும், இறுதியில், இந்த புதிய திட்டம் முற்றிலும் அதிகாரிகளின் செல்வாக்கின் கீழ் வந்துள்ளது. இத்திட்டத்தை அமுல்படுத்தும் போது கிராம உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் இதற்கு சிறந்த உதாரணமாகும். இது நாட்டில் அனைவரும் அறிந்த பிரச்சினையாகும். ஆகவே இதற்கு மேலதிக விளக்கம் கூறவேண்டிய தேவையில்லை.

இதனால், நாமும் ஏனைய கள அதிகாரிகளும் இத்திட்டத்தில் இருந்து விலகிக்கொண்டோம். எமக்குப் பதிலாக அரசாங்கத்தால் பணியில் அமர்த்தப்பட்ட இளைஞர்களுக்கு கிராம சூழல்கள் மற்றும் திட்டத்தின் அளவுகோல்கள் பற்றிய போதிய அறிவு இல்லை. வர்த்தமானி அறிவித்தலில் கிராம உத்தியோகத்தர்களுக்கு விதிக்கப்பட்ட தடைகள் இந்த நபர்களை பாதிக்கவில்லை.

கிராம சேவகர், காலி மாவட்டம்

## *ஊழலும் தவறான முகாமைத்துவமும்*

சமூக பாதுகாப்புத் திட்டங்களின் நிர்வாகத்தில் காணப்படும் ஊழலும் தவறான முகாமைத்துவமும், திறமையின்மையை மேலும் மோசமாக்குகிறது மற்றும் அவற்றின் செயற்திறனைக் குறைக்கிறது. இலஞ்சம், பாரபட்சமாக செயற்படுதல் மற்றும் நிதி மோசடி பற்றி கிடைக்கப்பெற்ற தகவல்கள், வளங்களை தவறாக ஒதுக்குவதற்கு வழிவகுத்தது மற்றும் இந்தத் திட்டங்களில் பொதுமக்களின் நம்பிக்கையை பலவீனப்படுத்தியது. சமூக நலனுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை தவறாக முகாமைத்துவம் செய்யும்போது, அது ஆதரவு தேவைப்படும் மக்களை வெகுவாகப் பாதிக்கின்றது. இந்த திட்டங்களை நியாயமாகவும் திறம்படவும் நடத்துவதற்கான அரசாங்கத்தின் திறன் மீதான நம்பிக்கையையும் இது குறைக்கின்றது. இந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் செயற்படுவதை உறுதி செய்வதற்கும், மேற்பார்வையை வலுப்படுத்துவது, வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பது மற்றும் கடுமையான ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்துவது மிக முக்கியமானது. (LIRNEasia 36-45).

## *அஸ்வெசும பற்றிய மக்களின் அபிப்பிராயம்*

அஸ்வெசுமா திட்டத்தைப் பற்றிய பொது மக்களின் பார்வையில், அது அமுல்படுத்தப்படும்போது பல்வேறு சிக்கல்கள் மற்றும் தவறான புரிதல்கள் எழுந்தன. 3.7 மில்லியன் விண்ணப்பங்கள் பெறப்பட்ட போதிலும், சில பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள், ஏற்கனவே சமூக பாதுகாப்புத் திட்டங்களைப் பெற்றிருந்தாலும் இல்லாவிட்டாலும், அஸ்வெசுமவிற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்ற முக்கிய செய்தியை அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை. இதன் விளைவாக, சில தகுதியான நபர்கள் இந்த பலன்களை பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கவில்லை.

"நான் சமுர்த்தி வங்கியில் ஒருநாள் கொடுப்பனவினை பெற்றுக்கொள்ள சென்றபோது, நான் பெற்றுக்கொண்ட கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை என்று கவுண்டரில் இருந்த அதிகாரி என்னிடம் கூறினார். நான் அவ்வாறு எவ்வித கடனையும் ஒருபோதும் வாங்கவில்லை, ஆனால் நான் அதை சிறிது காலத்திற்கு முன்பு வாங்கி அதை செலுத்தி வருகிறேன் என்று குறித்த அதிகாரி கூறினார். உண்மையில் என்ன நடந்ததென எனக்குப் புரியவில்லை."

லெட்சுமி (பெயர் மாற்றப்பட்டுள்ளது), சமுர்த்தி பெறுநர், கம்பளை

"நான் அண்மையில்தான் கொழும்பிலிருந்து இந்த மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்தேன். அங்கு எனது கணவருக்கு வீடு உள்ளது. நாங்கள் பிரிந்திருக்கவில்லை. இங்கு நாம் வீடு ஒன்றினை கட்டிக்கொண்டிருக்கின்றோம். அரைவாசி பகுதிதான் நாம் வீடு கட்டியுள்ளோம். மின்சாரம் மற்றும் நீர் வசதியில்லை. எனது பிள்ளைகள் சிறியவர்கள் என்பதால், நான் தொழிலுக்குச் செல்லவில்லை. நான் அஸ்வெசுமவிற்கு விண்ணப்பித்தேன். இளைஞர் ஒருவர் வீட்டிற்கு வந்து தரவுகளை சேகரித்தார். எனக்கு 15,000 ரூபா கொடுப்பனவு கிடைத்தது. இந்தச் சட்டத்தைப் பற்றி கேள்விப்பட்ட பிறகு, தவறான தகவலைச் சமர்ப்பித்தேன் என குற்றவாளியாகக் கருதப்படுவேனோ என்று நான் கவலைப்படுகிறேன்."

அமிதா (பெயர் மாற்றப்பட்டுள்ளது), தென் மாகாணத்தைச் சேர்ந்த இல்லத்தரசி ஒருவர்

மக்கள் தொகை கணக்கெடுப்புக்காக விண்ணப்பித்தவர்கள் QR குறியீட்டைப் பெற்றனர். இதனால் குறியீடு கிடைக்காதவர்கள் மத்தியில் பீதியும், பரபரப்பும் ஏற்பட்டது. இந்த அமைதியின்மையை அரசியல் சக்திகள் பயன்படுத்திக்கொண்டு அரசியல் ஆதாயத்தை பெற்றுக்கொண்டனர். ரைட் டு லை.ஃப் மனித உரிமைகள் நிலையத்தின் மதிப்பாய்வின்படி, நேரடி அரசியல் செல்வாக்கு இல்லை என்றாலும், கலந்துரையாடலில் பங்கேற்ற பலர் இந்த செயன்முறை அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டினர்.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள கிராம உத்தியோகத்தர்களும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இந்த செயற்பாடுகள் தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்கவில்லை. அவர்களே பெரும்பாலும் விவரம் அறியாமல் இருந்தனர். தற்காலிகமாக பணியில் அமர்த்தப்பட்ட கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மொபைல் செயலி பயன்பாடு என்பன நிலைமையை மேலும் மோசமாக்கியதோடு, பொதுமக்களிடையே குழப்பத்தையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியது. பல மாடி வீடுகள் மற்றும் வாகனங்கள் கொண்டவர்களும் அஸ்வெசும பலன்களைப் பெறுவதை பலர் கண்டுள்ளனர். அதே சமயம், தகுதியானவர்கள் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் என்று உணர்ந்தவர்கள், அதே ஆதரவைப் பெறவில்லை.

செலுத்தப்படும் தொகை குறித்தும் பெரிய தவறான புரிதல்கள் காணப்பட்டன. மிகவும் ஏழ்மையானவர்களுக்கு அதிகபட்சமாக ரூ.15,000 என்பது நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பது பல பயனாளிகளுக்குத் தெரியாது. இதன் விளைவாக, சிலர் தாம் நினைத்ததில் பாதியை மட்டுமே பெறுவதாக முறையிட்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக, வீடு மற்றும் குடும்ப அடிப்படையிலான கொடுப்பனவுகளுக்கு இடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது. பலர் குடும்பத்திற்கு வழங்கப்படுவதை விட வீடுகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுவதாக நம்புகின்றனர்.

"2002ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் பிரிவு 21 மற்றும் 22ஐத் திருத்துவதன் மூலம் கிராம சேவையாளர் தொழிற்சங்கங்களுடனான பிரச்சினையை அரசாங்கம் தீர்த்திருக்கலாம். எனினும், அவர்கள் மெத்தனப் போக்கையே கடைப்பிடித்தனர். தற்காலிக கணக்கீட்டாளர்களுக்கு போதிய அறிவும் அனுபவமும் இல்லாததால் தெரிவு செயற்பாட்டில் பெரும்பாலான தவறுகள் இடம்பெற்றுள்ளன. நேர்மையற்ற நபர்கள் இந்தச் சூழலைப் பயன்படுத்திக் கொண்டு அஸ்வெசும பலன்களைப் பெறுவதற்காக தவறான தகவல்களைச் சமர்ப்பித்தனர். இதன் விளைவாக, ஆதரவற்ற பலர் வாய்ப்பை இழந்தனர். கிராம நிர்வாக அலுவலர்கள் மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்தியிருந்தால், அவர்கள் தமது பகுதிகளில் வசிப்பவர்களை நன்கு புரிந்துகொண்டிருப்பார்கள். எவ்வாறாயினும், பிழைகள் இன்னும் தவறுதலாக நிகழலாம், ஏனென்றால் நமது சொந்தப் பகுதியில் உள்ள பொருளாதாரத் தரவு மட்டுமே எமக்குத் தெரியும். எமது பிரதேசத்திற்கு வெளியே அவர்கள் சொத்துக்களை வைத்திருக்கலாம். சிலர் திறந்த ஆவணங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்துகின்றனர், இது அவர்கள் உரிமையாளர்களாக உள்ளபோதும், உரிமையாளர்கள் அல்லர் என்று கூற அனுமதிக்கிறது. இவ்வாறான சிக்கலான சந்தர்ப்பங்களில் அதிகாரிகளை தண்டிப்பது நியாயமற்றது. எனவேதான் நாம் அஸ்வெசும கடமைகளை புறக்கணித்தோம்"

ஆனந்த (பெயர் மாற்றப்பட்டுள்ளது), கிராம சேவையாளர் தொழிற்சங்கத்தின் அதிகாரி

ரைட் டு லை.்.ப் மனித உரிமைகள் நிலையத்தின் கணக்கெடுப்பில் 42.4% வீடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இது விநியோக செயல்முறையின் சிக்கலையும் குழப்பத்தையும் விளைவித்துள்ளது. இந்த தவறான புரிதல், தமக்கு நியாயமற்ற முறையில் கொடுப்பனவு வழங்கப்படுவதாக அல்லது திட்டத்தில் இருந்து முழுமையாக வெளியேறியதாகக் கருதும் நபர்களிடமிருந்து முறைப்பாடுகளை மேற்கொள்ள வழிவகுத்தது.

தொடர்பாடல் பிரச்சினைகள், அரசியல் சுரண்டல் மற்றும் தளவாடச் சிக்கல்களால் அஸ்வெசும தொடர்பான பொதுமக்களின் பார்வை எதிர்மறையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த காரணிகள் திட்டத்தின் நேர்மை மற்றும் செயற்திறன் பற்றிய பரவலான அதிருப்தி மற்றும் அவநம்பிக்கைக்கு வழிவகுத்தன.

“நாம் தற்காலிக கணக்கெடுப்பாளர்களாக பணியாற்றினோம். மொபைல் செயலிகள் ஊடாக தரவுகளை சேகரிப்பதற்கு எமக்கு பயிற்சி வழங்கப்பட்டது. கணினி பல முறை புதுப்பிக்கப்பட்டாலும், கேள்விகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதையும் நாங்கள் காணவில்லை. இணைய இணைப்பு சிக்கல்கள் மற்றும் கணினி பிழைகள் போன்ற சவால்களை நாங்கள் எதிர்கொண்டோம். எனினும், மக்கள் வழங்கிய தகவல்களை நாம் துல்லியமாக பதிவுசெய்தோம். துரதிர்ஷ்டவசமாக, எங்கள் அவதானிப்புகளை பதிவு செய்ய முடியவில்லை. தரவைச் சமர்ப்பிக்கும் முன், அந்தத் தகவல் துல்லியமானது என்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். தெரிந்தே தவறான தரவுகளை உள்ளிட்டால் சட்டத்தின் கீழ் தண்டனையை எதிர்கொள்ள நேரிடும் என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும்.”

திலக் (பெயர் மாற்றப்பட்டுள்ளது),
தற்காலிக கணக்கெடுப்பாளர் - மத்துகம

“2021 ஆம் ஆண்டின் இறுதியில் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டன. அவை சமுர்த்திக்கானவை என்று நாங்கள் கருதினோம். அஸ்வெசும திட்டத்தைப் பற்றி எங்களுக்குத் தெரியாது. 2022 இல், கணக்கெடுப்பாளர்கள் தேர்வு செயன்முறையை நடத்தினர். குழுத் தலைவர் பதவியின் காரணமாக நான் தானாகவே தேர்ந்தெடுக்கப்படுவேன் என்று நம்பினேன், அதனால் நான் அஸ்வெசுமாவுக்கு விண்ணப்பிக்கவில்லை.”

ராமநாதன், சென். லெனாட் தோட்டம், ராகலை, சமுர்த்தி குழுத் தலைவர்

இந்த நேர்காணலில் தென் மாகாணத்தில் உள்ள ஒரு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அபிவிருத்தி உதவியாளருடன் நாம் உரையாடுகின்றோம். அஸ்வெசும கணக்கெடுப்புக்கான தற்காலிக கணக்காளராக, தரவு சேகரிப்பு செயன்முறை குறித்த தனது அனுபவத்தை அவர் பகிர்ந்து கொள்கிறார். கணக்கெடுப்பின் போது அவர் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் அவரது தனிப்பட்ட அனுபவங்களையும் அவர் குறிப்பிடுகின்றார்.

**கே : உங்களைப் பற்றியும் நீங்கள் செய்த பணி தொடர்பாகவும் விபரிக்க முடியுமா?**

ப : அஸ்வெசும கணக்கெடுப்புக்கான தற்காலிக கணக்கெடுப்பாளராகப் பங்கேற்றேன். எனது நிறுவனத்தைச் சேர்ந்த மற்ற இரு அதிகாரிகளுடன் இணைந்து தென் மாகாணத்தில் உள்ள ஒரு கிராம அலுவலர் பிரிவில் முழுமையான கணக்கெடுப்பை நடத்தினேன். ஒரு குடும்பத்தின் கணக்கெடுப்பிற்கு 300 ரூபாய் என்ற அடிப்படையில் எனக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டது.

**கே: கணக்கெடுப்பின் போது நீங்கள் பின்பற்றிய அளவுகோல்கள் யாவை?**

ப: குறிப்பிட்ட சில அளவுகோல்களை நாம் பின்பற்ற வேண்டியிருந்தது. பெயர், வயது, வீட்டு உரிமை, தொழில் மற்றும் சொத்துக்கள் போன்ற விபரங்களை உள்ளடக்கியதாக அது அமைந்தது. அத்தோடு, மதிப்பெண்களை வழங்கும் முறைபற்றி கணக்கெடுப்பை நடத்துபவருக்கு மட்டுமே தெரியும்.

**கே: ஒரே வீட்டில் பல குடும்பங்கள் வசிக்கும் போது கணக்கெடுப்புகளை எவ்வாறு நடத்தினீர்கள்?**

ப: ஒரு வீட்டில் பல குடும்பங்கள் வசிக்கும் போது, எத்தனை குடும்பங்கள் வசிக்கின்றன என்று கேட்டோம். ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனி தலைவர் இருந்தால், அவர்களை தனித்தனி குடும்பங்களாகக் கணக்கிட்டோம். குடும்பத் தலைவர் தமது குழந்தைகளுடன் வாழ்ந்தால், அங்கு மகன் அல்லது மகள் மாத வருமானம் ஈட்டினால், அது குடும்ப வருமானமாகக் கருதப்படும்.

**கே: மகன் ஒரு தனி குடும்பமாக பதிவு செய்யப்பட்டுள்ள அதே சந்தர்ப்பத்தில், அவரது பெற்றோர் ஒரே வீட்டில் வசித்து வந்த நிலைமைகளில் என்ன செய்தீர்கள்?**

ப: இதுபோன்ற சந்தர்ப்பங்களில், பெற்றோருக்கு எந்த சொத்தும் உரிமை இல்லை என்றால், அது அவர்களுக்கு சாதகமாக இருந்தது. உரிமையைக் குறிக்கும் வகையில், விண்ணப்பத்துடன் வீட்டின் புகைப்படத்தை இணைக்கும் விதிமுறை உள்ளது. விண்ணப்பம் சரியாக உள்ளதா என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு கணக்கெடுப்பாளருக்கே வழங்கப்பட்டது. அஸ்வெசும தரவுகளில் சுமார் 50%-60% துல்லியமானது என்பதே எனது தனிப்பட்ட கருத்து. கிராம சேவையாளர்கள் இந்த கணக்கெடுப்பை நடத்தியிருந்தால், குடியிருப்பாளர்கள் பற்றி அவர்களுக்கு நன்கு தெரியும். ஆகவே அந்த செயன்முறை வெற்றிகரமாக அமைந்திருக்கும்.

**கே: நீங்கள் மேலும் இருவருடன் சென்றதாக குறிப்பிட்டுள்ளீர்கள். அவர்கள் யார்?**

ப: அவர்கள் எமது பிரதேச செயலக அலுவலகத்தின் பிரதம சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் நிறுவன அபிவிருத்தி உத்தியோகத்தர்.

**கே: உங்களுடன் பணிபுரிந்த கணக்கெடுப்பாளர்கள் உங்களைப் போன்ற அறிவாளிகளா? அவர்கள் உங்கள் மேற்பார்வையில் வேலை செய்தார்களா?**

ப: இல்லை, அவர்கள் சுயாதீனமாக பணியாற்றினர். வினாத்தாள் உரிய முறையில் கட்டமைக்கப்பட்டதால், அரச அதிகாரிகள் மற்றும் தற்காலிக கணக்கெடுப்பாளர்களின் உணர்திறன் மற்றும் விழிப்புணர்வு மட்டுமே வித்தியாசமாக இருந்தது.

**கே: சில கணக்கெடுப்பாளர்கள் வீடுகளுக்குச் செல்லாமல் படிவங்களை நிரப்பியதாகக் கூறப்படுகிறது. இது சாத்தியமா?**

ப: இல்லை, நாம் குறிப்பிட்ட இடத்திற்குச் செல்வதற்கு செயலியில் உள்ள ஜிபிஎஸ் பயன்பாடு அவசியம். படிவங்களை நிரப்புவதற்கு முன், ஜிபிஎஸ்-ஐ செயற்படுத்தவும் வேண்டும்.

**கே: கணக்கெடுப்பாளர் ஒரு வீட்டிற்குச் சென்றுவிட்டு, மற்றொரு வீட்டிற்கு படிவங்களை நிரப்பியதாக கூறப்படுகின்றதே?**

ப: கணக்கெடுப்பாளர் குறித்த வீட்டிற்குச் செல்லவில்லை என்றால், அவர்களால் படிவத்தை துல்லியமாக நிரப்ப முடியாது.

**கே: கணக்கெடுப்பின் செயற்திறனைப் பற்றிய உங்கள் தனிப்பட்ட கருத்து என்ன?**

ப: முன்னைய சமுர்த்தித் திட்டத்தின் தெரிவுச் செயன்முறையை விட இந்த கணக்கெடுப்பு மிகவும் பயனுள்ளதாக இருந்தது என நான் நம்புகிறேன், ஆனால் நிச்சயமாக குறைபாடுகள் காணப்பட்டன.

**கே: தெளிவான குடும்பத் தலைவர் இல்லாத வீடுகளில் இருந்து தகவல்களைச் சேகரிக்கும் போது ஏதேனும் சிக்கல்களைச் சந்தித்தீர்களா?**

ப: இல்லை, எந்த குடும்ப உறுப்பினரும் தகவலை வழங்க முடியும். பின்னர், அது QR குறியீடு வைத்திருப்பவரால் சரிபார்க்கப்பட்டு கையொப்பமிடப்பட்டது.

**கே: வீடுகளில் யாரும் இல்லாத போது என்ன செய்தீர்கள்?**

ப: வீட்டில் யாரும் இல்லாவிட்டால் துல்லியமான தகவல்களை சேகரிக்க முடியாது. சில நேரங்களில் நாம் விட்டிற்கு சென்றதை நிரூபிக்க புகைப்படங்கள் எடுத்தோம், ஆனால் வீட்டில் யாரும் இல்லாத காரணத்தால் தரவை சேகரிக்க முடியவில்லை.

**கே: QR குறியீட்டுடன் புகைப்படம் எடுப்பது கட்டாயமா?**

ப: ஆமாம். இந்த படிமுறையை தவிர்ப்பதற்கு அனுமதியில்லை. இது தரவின் ஒருமைப்பாட்டை உறுதி செய்கின்றது.

**கே: QR குறியீடுகள் இல்லாதவர்கள் என்ன செய்வது?**

ப: ஒதுக்கப்பட்ட குடும்பங்களின் கேள்விகளுக்கான பதில்களை சேகரிப்பதைத் தாண்டி எமக்கு வேறு எந்த அதிகாரமும் இல்லை.

## 3. தங்கிவாழும் கலாச்சாரம்

### *நீண்டகால நலன்களை சார்ந்திருத்தல்*

பயனாளிகள் மத்தியில் உருவாக்கக்கூடிய நீண்டகால சார்ந்திருக்கும் கலாச்சாரமானது, இலங்கையின் சமூக பாதுகாப்புத் திட்டங்கள் எதிர்கொள்ளும் மற்றொரு சவாலாகும். சமூக பாதுகாப்புத் திட்டங்கள், பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தாலும், நலன்புரி நலன்களை நீண்டகாலமாக நம்பியிருப்பது சார்புநிலைக்கு வழிவகுக்கும். இந்தச் சார்பு பயனாளிகளின் வேலைவாய்ப்பைத் தேடுவதற்கான ஊக்கத்தைக் குறைக்கலாம் அல்லது அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதை குறைக்கலாம். இந்த சார்பு கலாச்சாரமானது, சமூக நலத் திட்டங்களின் இலக்குகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும். இந்தத் திட்டங்கள் தற்காலிக நிவாரணம் வழங்குவது மட்டுமல்லாமல், தன்னிறைவு அடைய தனிநபர்களை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

"சிறு குழுக்களின் ஊடாக நான் சமுர்த்தி திட்டத்தில் கடன் பெற்றுள்ளேன். சமுர்த்தி பயனாளிகள் மற்றும் பயனாளிகள் அல்லாதோரும் கடன்களை பெற்றுக்கொள்ள முடியும். நாங்கள் ஐந்து பேர் கொண்ட குழுக்களை உருவாக்கி 50,000 முதல் 100,000 ரூபா வரை கடன்களை பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு 1 முதல் 2 வீதம் வரை வட்டி அறவிடப்படும். இதில் ஒரு உறுப்பினர் கடன் செலுத்தத் தவறினால், ஏனையோர் புதிய கடன்களை பெற்றுக்கொள்ள முடியாது. முன்பு நான் வீட்டினை புனரமைப்பதற்கும் விவசாயத்திற்கும் கடன் பெற்று, வட்டியுடன் மீளச் செலுத்தினேன். வங்கியின் இலாபத்தைத் தக்கவைக்க கடனுக்காக அஸ்வெசும பயனாளிகள் மற்றும் சமுர்த்தி அல்லாத பயனாளிகள் இருவரையும் அதிகாரிகள் இலக்கு வைத்துள்ளனர்."

ரேணுகா (பெயர் மாற்றப்பட்டுள்ளது), விவசாயி, அம்பாந்தோட்டை

ரைட் டு லை∴ப் மனித உரிமைகள் நிலையம் நடத்திய ஆய்வில் பங்கேற்றவர்களில் 23.2% பேர், 10 வருடங்களுக்கும் மேலாக அரச மானியங்களைப் பெற்று வருகின்றனர். முந்தைய சமுர்த்தி சமூக பாதுகாப்புத் திட்டம், வாழ்வாதாரத்திற்கான உதவி, புதிய திறன்களுக்கான பயிற்சி, சேமிப்பு மற்றும் கடன்களுக்கான விருப்பத்தெரிவுகள் உட்பட பல்வேறு வகையான ஆதரவை வழங்கியது. குறிப்பாக பயிர்களை வளர்ப்பதற்கும் அறுவடை செய்வதற்கும் முதலீடு தேவைப்படும்போது இந்த கூறுகள் உதவிகரமாக இருப்பதாக பல பயனாளிகள் தெரிவித்தனர். அஸ்வெசும இதே போன்ற திட்டங்களைச் சேர்க்க திட்டமிட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் வாரியத்தின் ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன. எனினும், அவை இன்னும் செயற்படுத்தப்படவில்லை.

### *ஊக்கம் மற்றும் தன்னிறைவு மீதான தாக்கம்*

ஊக்கம் மற்றும் தன்னிறைவு ஆகியவற்றில் நீண்டகால சார்புநிலையின் தாக்கம் ஒரு முக்கிய கரிசனையாக உள்ளது. நீண்ட காலமாக நலன்புரிச் சலுகைகளை நம்பியிருக்கும் பயனாளிகள் தொழிலாளர் சந்தையில் இருந்து விலகி, தனிப்பட்ட மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான வாய்ப்புகளை தொடர்வதற்கு விரும்புவதில்லை. இந்நிலைமை மக்கள் நலத்திட்ட உதவிகளை நீண்ட காலமாக நம்பி, அவர்கள் சுதந்திரமாக வாழ்வதில் சிரமத்தை ஏற்படுத்தும். உதாரணமாக, அஸ்வெசும திட்டப் பயனாளிகளின் கருத்து, நிதி உதவி உதவிகரமாக இருந்தாலும், அது அவர்களின் பொருளாதார நிலை அல்லது தன்னிறைவு ஆகியவற்றில் நீடித்த முன்னேற்றங்களுக்கு வழிவகுக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. இதை நிவர்த்தி செய்ய, சமூக பாதுகாப்பு வலைத் திட்டங்களில் திறன் மேம்பாடு, வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் கூறுகள் இருக்க வேண்டும். இது பயனாளிகள் நலன் சார்ந்த சார்பிலிருந்து பொருளாதார சுதந்திரத்திற்கு செல்ல உதவும்.

இலங்கையின் சமூக பாதுகாப்பு திட்டங்களின் வெற்றி மற்றும் நீண்ட கால நிலைத்தன்மைக்கு இந்த சவால்களை கையாள்வது அவசியமாகும். இலக்கின் துல்லியத்தை மேம்படுத்துவதன் மூலமும் நிர்வாகத் திறனை மேம்படுத்துவதன் மூலமும், இலங்கை தனது சமூக நல அமைப்பை வலுப்படுத்த முடியும். ஊழலை எதிர்த்துப் போராடுவதும், பயனாளிகளிடையே பொருளாதாரத் தன்னிறைவை ஊக்குவிப்பதும், சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய உறுப்பினர்களை இந்த அமைப்பு திறம்பட ஆதரிப்பதை உறுதிசெய்ய உதவும்.

"நான் ஒரு ஊடகவியலாளர். ∴ப்ரெடா கொரியா என்ற அமைப்பு, அண்மையில் பெண் சிறுதொழில் முனைவோர் பற்றி கதையெழுதும் போட்டியொன்றை நடத்தியது. குறித்த கதை தெரிவுசெய்யப்பட்டால், குறித்த பெண் தொழில்முனைவோருக்கு 400000 ரூபாயும் ஊடகவியலாளருக்கு 200000 ரூபாயும் வழங்கப்படும். நான் ஒரு விதிவிலக்கான சிறு-தொழில்முனைவோரைக் கண்டுபிடித்து, அவளுடைய கதையை எழுத அனுமதி கேட்டேன். இருப்பினும், பரிசுத் தொகையைப் பற்றி அறிந்ததும், பரிசை ஏற்றுக்கொள்வதால், அஸ்வெசும நலன்களில் இருந்து தன்னை நீக்கிவிடலாம் என்று பயந்து அவர் மறுத்துவிட்டார்"

காந்தி (பெயர் மாற்றப்பட்டுள்ளது),
குருநாகலையைச் சேர்ந்த ஊடகவியலாளர்

“சமூக நலன்கள் பெரும்பாலும் வேலை செய்யும் வயதினரை வேலை தேடுவதை குறைக்கிறது. சிலர் வேலை தேடுவதை விட நன்மைகளைப் பெற அதிக நேரத்தை செலவிடுகிறார்கள். நலத்திட்ட உதவிகளை வழங்குவதை விட, உழைக்கும் வயதில் உள்ளவர்களுக்கு வேலை வழங்குவது முக்கியம். இதற்கு மேலதிகமாக, முறைசாரா துறையில் பணிபுரிபவர்களின் வருமானம் கணக்கெடுப்புகளில் துல்லியமாக தெரிவிக்கப்படவில்லை.”

நவமணி (பெயர் மாற்றப்பட்டுள்ளது), மருத்துவச்சி, நுவரெலியா

## *அஸ்வெசுமவின் இரண்டாவது கட்டம்*

இலங்கையில் அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் 450,000 புதிய விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இது சமூக உதவிக்கான அதிக தேவையைக் காட்டுகிறது. நலன்புரி நன்மைகள் வாரியம் விரிவான தரவு சேகரிப்பு செயன்முறையை ஆரம்பித்துள்ளதோடு, இது 2024 ஜூலை மாத இறுதிக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட மொபைல் தொலைபேசி அணுகல் மற்றும் ஏழை சமூகத்தினரிடையே காணப்படும் குறைந்த டிஜிட்டல் எழுத்தறிவு என்பவற்றால், இத்திட்டம் இன்னமும் தொடர்பாடல் சவால்களை எதிர்கொள்கிறது. மக்கள் தொகை கணக்கெடுப்பு செயன்முறை விவரங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. எனினும், இலக்குவைக்கப்பட்ட மக்கள் தொகையில் பத்திரிகை வாசகர்கள் குறைவாக இருப்பதால், இது தொடர்பாடல் தடையை உருவாக்குகிறது. கணக்கீட்டாளரின் வருகைகள் பற்றிய அறிவிப்புகள் குறுஞ்செய்திகள் மூலம் அனுப்பப்படுகின்றன, ஆனால் பல குடும்பங்கள் அவற்றைப் பெறாமல் போகலாம். கணக்கெடுப்பாளர் வரும் வரை அவர்கள் வீட்டிலேயே இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. வயது வந்த குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் தேசிய அடையாள அட்டைகள் மற்றும் காணி உறுதிகள், வங்கிக் கடவுச்சீட்டுகள் மற்றும் மருத்துவப் பதிவுகள் உள்ளிட்ட பல்வேறு ஆவணங்களைச் சரிபார்ப்பதற்காக சமர்ப்பிக்க வேண்டும். சேகரிக்கப்பட்ட தரவின் துல்லியம் பங்கேற்பாளர்களால் மதிப்பாய்வு செய்யப்பட்டு கையொப்பமிடப்படும்.

தரவு சேகரிப்புக்குப் பின்னர், ஒரு குழு விண்ணப்பங்களை மதிப்பாய்வு செய்து, ஆட்சேபனைகளை நிவர்த்தி செய்து, தகுதியான விண்ணப்பதாரர்கள் மட்டுமே பலன்களைப் பெறுவதை உறுதி செய்யும்.

முதல் கட்டத்தில் பலன்களைப் பெற்ற 1.8 மில்லியன் பயனாளிகளுக்கான தகவலைப் புதுப்பிப்பதையும் இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொடர்ச்சியான எதிர்ப்புக்கள் காரணமாக அஸ்வெசும அமுலாக்கப்படுவதற்கு தடையாக உள்ளது. பிரதேச செயலக அலுவலகங்களில் நிர்வாக உத்தியோகத்தர்கள் வேலைத்திட்டத்தில் ஈடுபடுவதற்கு கொடுப்பனவுகளை கோருகின்றனர். இது இலங்கையில் பயனுள்ள நிர்வாகம் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டங்களுக்கான ஆதரவை உறுதி செய்வதற்கான பரந்த சவால்களை பிரதிபலிக்கிறது.

## குறிப்புகள்

"The Effectiveness of Aswesuma Welfare Benefit Scheme Preliminary Findings and Ongoing Assessments." *The Effectiveness of Aswesuma Welfare Benefit Scheme Preliminary Findings and Ongoing Assessments,* Right to Life Human Rights Centre, Nov. 2023.

LIRNEasia. *Social Safety Nets and the State of Poverty in Sri Lanka.* LIRNEasia, 2023.

அத்தியாயம் 6

# முன்னேற்றத்திற்கான மூலோபாயங்கள்

### 1. பயனாளிகளை துல்லியமாக இலக்குவைத்தல்

*தரவு ரீதியான அணுகுமுறைகள்*

பயனாளிகளை துல்லியமாக இலக்குவைப்பதை மேம்படுத்த, தரவு ரீதியான அணுகுமுறைகளை பின்பற்றுவது மிக முக்கியமானது. முழுமையான தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வைப் பயன்படுத்துவது மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களை அடையாளம் காணவும், சமூக பாதுகாப்புத் திட்டங்கள் மிகவும் தேவைப்படுபவர்களை திறம்பட சென்றடைவதை உறுதி செய்யவும் உதவும். மேம்பட்ட தரவு பகுப்பாய்வு மற்றும் இயந்திர கற்றல் வழிமுறைகளை இணைப்பதன் மூலம் பயனாளிகளின் தேர்வின் துல்லியத்தை மேம்படுத்த முடியும். இந்தக் கருவிகள் வருமான நிலைகள், வேலைவாய்ப்பு நிலை, குடும்ப அளவு மற்றும் புவியியல் இருப்பிடம் போன்ற பல்வேறு சமூக-பொருளாதார குறிகாட்டிகளை பகுப்பாய்வு செய்கின்றன. பல்வேறு அரசாங்கத் துறைகள் மற்றும் முகவரகங்களின் தரவை ஒருங்கிணைத்து ஒரு மையப்படுத்தப்பட்ட தரவுத்தளத்தை உருவாக்குவது இலக்கு செயன்முறையை மிகவும் முறையாகவும் வெளிப்படையாகவும் செய்யலாம்.

ஆதார் என்பது இந்திய அரசின் சார்பாக இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தால் வழங்கப்பட்ட 12 இலக்க அடையாள எண் ஆகும். UIDAI நிர்ணயித்த சரிபார்ப்பு செயன்முறைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வயது அல்லது பாலினத்தைப் பொருட்படுத்தாமல், இந்தியாவில் வசிப்பவர் எவரும் ஆதாருக்குப் பதிவு செய்ய முடியும்.

மக்கள் ஒருமுறை மட்டுமே இதற்கு பதிவு செய்ய வேண்டும், மேலும் இந்தியாவில் வசிப்பவர்கள் அனைவருக்கும் இந்தப் பதிவு இலவசமாகும். ஆதார் எண் ஒவ்வொரு நபருக்கும் தனிப்பட்டது மற்றும் வாழ்நாள் முழுவதும் செல்லுபடியாகும். வங்கி, கையடக்க தொலைபேசி இணைப்புகள் மற்றும் ஏனைய சேவைகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை காலப்போக்கில் பெற்றுக்கொள்வதற்கு ஆதார் எண் உதவுகின்றது.

ஆதார் செயன்முறை ஊடாக, தனது சமூக பாதுகாப்புத் திட்டங்களை டிஜிட்டல் மயமாக்குவதில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. பொது விநியோக அமைப்புடன் ஆதார் இணைக்கப்பட்டுள்ளதோடு, இது உணவு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களுக்கான மானியங்கள் சரியாக விநியோகிக்கப்படுவதை உறுதிப்படுத்த உதவுகின்றது. பயனாளிகள் தமது ஆதார் எண்களைப் பயன்படுத்தி விநியோக மையங்களில் தம்மை அடையாளப்படுத்துகின்றனர்.

நேரடி பலன் பரிமாற்றமானது மானியங்களை நேரடியாக பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்கிறது. இது தவறான பயன்பாட்டைத் தடுக்க உதவுகிறது மற்றும் சரியான நேரத்தில் பணம் செலுத்தப்படுவதை உறுதி செய்கிறது. ஆதார் மூலமான கொடுப்பனவுகள், செயல்முறையை தெளிவாகவும் திறமையாகவும் ஆக்கியுள்ளது.

நிலம், வாகனப் பதிவு மற்றும் வரிவிதிப்பு செயன்முறைகளை டிஜிட்டல் மயமாக்குவது, சமூக பாதுகாப்புத் திட்டங்களின் செயலாக்கத்தையும் செயற்திறனையும் பெரிதும் மேம்படுத்துகிறது. துல்லியமான மற்றும் வெளிப்படையான பதிவுகளை உறுதி செய்வதன் மூலம், டிஜிட்டல் மயமாக்கலானது பயனாளிகளின் இலக்கை மேம்படுத்துகிறது, மோசடிகளை குறைக்கிறது மற்றும் அவர்களுக்கு மிகவும் தேவைப்படுபவர்களுக்கு வளங்கள் ஒதுக்கப்படுவதை உறுதி செய்கின்றது. இந்தியாவின் வெற்றிகரமான டிஜிட்டல் முறைமைகளைப் பயன்படுத்துவது இலங்கைக்கு இந்தத் தொழில்நுட்பங்களை எவ்வாறு திறம்படப் பயன்படுத்துவது என்பதற்கான பெறுமதிமிக்க பாடங்களை வழங்குகிறது.

உதாரணமாக, கர்நாடகாவின் பூமி திட்டமானது காணி பதிவேடுகளை டிஜிட்டல் மயமாக்கி, இணையத்தில் இலகுவாக பெற்றுக்கொள்ள அனுமதிக்கிறது. இதன் மூலம் காணித் தகராறுகள் குறைந்து, சரியான உரிமையாளர்களை இலகுவாக கண்டறிய முடிந்தது. விவசாய மானியங்கள் மற்றும் ஏனைய கிராமப்புற மேம்பாட்டுத் திட்டங்களின் இலக்கினை, துல்லியமான காணிப் பதிவுகள் மேம்படுத்தியுள்ளன. நேர்மையான முறையில் காணிகளை வைத்திருக்கும் விவசாயிகள், அதிகாரத்துவ தாமதமின்றி இலகுவாக பலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### *வழமையான கண்காணிப்பும் மதிப்பீடும்*

சமூக பாதுகாப்பு திட்டங்களின் ஒருமைப்பாடு மற்றும் செயற்திறனைப் பேணுவதற்கு வழக்கமான கண்காணிப்பும் மதிப்பீடும் முக்கியமானது. பயனாளிகள் எவ்வாறு செயற்படுகிறார்கள் மற்றும் திட்டங்கள் எவ்வளவு சிறப்பாகச் செயற்படுகின்றன என்பதைக் கண்காணிக்கும் வலுவான கண்காணிப்பு அமைப்பினை கொண்டிருப்பது, அவற்றின் செயற்திறனைப் புரிந்துகொள்ள உதவும். திட்டங்கள் அவற்றின் இலக்குகளை அடைகின்றனவா என்பதைச் சரிபார்க்கவும், முன்னேற்றம் தேவைப்படும் பகுதிகளைக் கண்டறியவும் அவ்வப்போது மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும். பயனாளிகள் கணக்கெடுப்புகள் மற்றும் சமூக ஆலோசனைகள் போன்ற பின்னூட்ட வழிமுறைகளை கண்காணிப்புச் செயற்பாட்டில் சேர்க்க வேண்டும். இது நிகழ்நேரத் தரவைச் சேகரிக்க உதவுகின்றது மற்றும் தொடர்ந்து மேம்பாடுகளை உறுதிப்படுத்துகிறது.

## 2. திட்டத்தின் செயற்திறனை மேம்படுத்தல்

### *நிர்வாக செயன்முறைகளை சீரமைத்தல்*

சமூக பாதுகாப்பு திட்டங்களின் செயற்திறனை மேம்படுத்துவதற்கு நிர்வாக செயன்முறைகளை நெறிப்படுத்துவது மிகவும் முக்கியமானது. விண்ணப்ப நடைமுறைகளை இலகுவாக்குதல், ஆவணங்களை குறைத்தல் மற்றும் அதிகாரத்துவ தடைகளை குறைத்தல் ஆகியவை தகுதியான நபர்கள் பலன்களை இலகுவாக பெற்றுக்கொள்ள உதவும். விண்ணப்பதாரர்கள் தமது தகவல் மற்றும் ஆவணங்களை ஒருமுறை சமர்பிக்கும் ஒற்றைச் சாளர அமைப்பை அறிமுகப்படுத்துவது, மற்றும் அனைத்து தொடர்புடைய துறைகளுடன் இதைப் பகிர்ந்துகொள்வது, விண்ணப்பங்களைச் செயற்படுத்துவதற்கும் தேவைப்படும் நேரத்தையும் முயற்சியையும் வெகுவாகக் குறைக்கும். இதற்கு மேலதிகமாக, விண்ணப்பங்களை மிகவும் திறமையாகவும், உணர்வுபூர்வமாகவும் கையாள நிர்வாக ஊழியர்களுக்கு பயிற்சி அளிப்பது பயனாளிகளுக்கு ஒட்டுமொத்த அனுபவத்தை மேம்படுத்தும்.

### *மேம்பட்ட தொழில்நுட்ப பயன்பாடு*

தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் சமூக நலத் திட்டங்களின் செயற்திறனை கணிசமாக மேம்படுத்த முடியும். விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல், செயலாக்குதல் மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றிற்கு டிஜிட்டல் தளங்களைப் பயன்படுத்தும்போது, அது செயற்பாடுகளை இலகுபடுத்தி நிர்வாகச் செலவுகளைக் குறைக்கின்றது. பயனாளிகளுக்கு அவர்களின் விண்ணப்ப நிலை, பலன் கொடுப்பனவுகள் மற்றும் செயற்திட்ட புதுப்பிப்புகள் பற்றிய தகவல்களை எளிதாக பெற்றுக்கொள்ள மொபைல் செயலிகள் மற்றும் இணையத்தளங்களை மேம்படுத்தலாம்.

### *சமூக நலப் பலன்களுக்காக வங்கிப் பயன்பாட்டை மேம்படுத்தல் - ஒரு வெற்றிக்கதை*

2023 வரவு செலவுத் திட்ட உரையில், வங்கிகள் மூலம் பலன்களை செலுத்துவதற்கான திட்டங்களை அரசாங்கம் அறிவித்தது. LIRNEasia நடத்திய ஆய்வில், வறுமையில் வாடும் பெரியவர்களில் 60% பேர் அரசு அல்லது தனியார் வங்கிகளில் வங்கிக் கணக்குகளை வைத்திருப்பதாகக் கண்டறிந்துள்ளது. இதற்கு மேலதிகமாக, ரைட் டு லை.ஃ.ப் மனித உரிமைகள் நிலையம் நடத்திய ஆய்வில், 86 வீதமானோர் வங்கிக் கணக்கைக் கொண்டிருப்பதாகக் காட்டியது, இதில் ஒழுங்குபடுத்தப்படாத வங்கிகளின் கணக்குகளும் அடங்கும். இருப்பினும், 30.6% பேர் மட்டுமே இந்தக் கணக்குகளில் அல்லது வேறு வகையான சேமிப்புகளில் சேமிப்பு இருப்பதாக அறிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், நேரடியாக பணம் செலுத்தும் ஆரம்பகட்ட நடவடிக்கை பல்வேறு சவால்களை எதிர்கொண்டது. முறையற்ற வங்கிக் கணக்குத் திறப்பு காரணமாக, 156,261 அஸ்வெசும பயனாளிகளுக்கு பணம் செலுத்த முடியவில்லை என ஜனாதிபதி செயலகம் 2023 ஒக்டோபரில் அறிவித்தது. தேசிய அடையாள அட்டை இல்லாத காரணத்தால் வங்கிக் கணக்குகளைத் திறக்க முடியாத விண்ணப்பதாரர்களுக்கு, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் பிராந்திய அபிவிருத்தி வங்கி ஆகியவை ஆறு மாதங்களுக்குள் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் கணக்குகளைத் திறக்க அனுமதித்தன.

“பணத்தை பெற்றுக்கொள்வதற்காக நாம் சமுர்த்தி வங்கிக்கு செல்லவேண்டியுள்ளது, இதற்கு நீண்ட நேரம் செல்வதோடு, பணமும் செலவாகும். எனக்கு வங்கிக் கணக்கு இல்லை. அஸ்வெசுமவிற்கு தெரிவுசெய்யப்பட்ட பின்னர் நான் வங்கிக் கணக்கை ஆரம்பித்தேன். வாழ்க்கையில் நான் வங்கிக் கணக்கை பயன்படுத்த ஆரம்பித்துள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.”

ராணி, (பெயர் மாற்றப்பட்டுள்ளது) - தேயிலைத் தொழிலாளி, பதுளை

அஸ்வெசும கொடுப்பனவுகளை இலகுபடுத்துவதற்காக, ஆரம்பத்தில் மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் இலங்கை வங்கி ஆகியவற்றின் அனைத்து கிளைகளும் பௌர்ணமி விடுமுறை தினங்களிலும் திறந்திருந்தன. இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பயனாளிகளில் ஒரு தொகுதியினர் இன்னும் வங்கிக் கணக்குகளை திறக்கவில்லை. அவர்களில் பலர் சமுர்த்தி வங்கிகளில் கணக்குகளை வைத்திருந்தனர். எனினும், இலங்கை மத்திய வங்கியால் குறித்த வங்கிகள் ஒழுங்குபடுத்தப்படாததால் அவை அங்கீகரிக்கப்படவில்லை. வங்கிக் கணக்குகளை திறப்பதற்காக ஆரம்பத்தில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். ஆரம்ப வைப்புத் தொகை இன்றி மக்களுக்கு கணக்குகளைத் திறக்க அனுமதிக்குமாறு அரச வங்கிகளுக்கு அரசு அறிவுறுத்தியது. இதனால் வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது.

### 3. பொருளாதார வலுப்படுத்தலை ஊக்குவித்தல்

*திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் வாய்ப்புடன் நல்வாழ்வினை இணைத்தல்*

சார்புநிலையைக் குறைப்பதற்கும் நீண்ட காலப் பொருளாதார அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்கும், சமூக நலத் திட்டங்களில் மக்களுக்குப் பயிற்சி மற்றும் தொழில் வாய்ப்புகள் இருக்க வேண்டும். இது அவர்கள் தன்னிறைவு பெறுவதற்கு உதவும். பயனாளிகளுக்கு தொழில் பயிற்சி, கல்வி மற்றும் வேலை வாய்ப்பு சேவைகள் ஆகியவற்றுக்கான அணுகலை வழங்குவதன் மூலம் அவர்கள் நிலையான வேலைகளைக் கண்டறியத் தேவையான திறன்களைப் பெற உதவலாம். அஸ்வெசும திட்டம் போன்ற திட்டங்கள் உள்ளூர் வணிகங்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களுடன் இணைந்து மக்கள் நலன் சார்ந்து நிதி ரீதியாக சுதந்திரமாக மாற உதவ முடியும்.

> "சார்பு மனப்பான்மை எமது நாட்டிற்கு பொருத்தமற்றது மற்றும் அகற்றப்பட வேண்டும். காணியுள்ள போதிலும், சிலர் விவசாயத்தில் ஈடுபடுவதில்லை. விவசாயத்திற்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கி சுயதொழில் செய்வதற்கான வாய்ப்பை அரசு உருவாக்க வேண்டும். பலாப்பழம் மற்றும் ஈரப்பலா போன்றவற்றிலிருந்து உணவுப்பொருட்களைத் தயாரிக்கக்கூடியவர்கள் உள்ளனர். எனினும், அவர்களுக்கு உரிய இடம் கிடைப்பதில்லை, ஆதரவும் கிடைப்பதில்லை. செலுத்தப்படாத கடன்களுக்கு அபராதம் விதிப்பதை விடுத்து, அவர்கள் தன்னிறைவு அடைய அரசாங்கம் உதவ வேண்டும். சிறு தொழில்முனைவோருக்கு வாய்ப்புகளை அதிகரிப்பது மிகவும் முக்கியமானது, ஆனால் அவை பெரும்பாலும் ஆதரிக்கப்படுவதற்குப் பதிலாக தடையாக இருக்கின்றன."
>
> மல்லிகா, இல்லத்தரசி, கம்புறுபிட்டிய

*தொழில்முனைவோரை ஊக்குவித்தல்*

பயனாளிகள் மத்தியில் தொழில்முனைவோரை ஆதரிப்பது அவர்கள் நிதி ரீதியாக சுதந்திரமாக இருக்கவும், நலத்திட்டங்களில் தங்கியிருப்பதைக் குறைக்கவும் உதவும். சமூக நலத் திட்டங்கள் நுண்நிதி வாய்ப்புகள், வணிகப் பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் ஆகியவற்றை தனிநபர்கள் சிறு வணிகங்களைத் தொடங்கவும் நிர்வகிக்கவும், சுய வேலைவாய்ப்பு மற்றும் நீண்ட கால நிதிச் சுதந்திரத்தை மேம்படுத்த உதவுகின்றன. தொழில் முனைவோர் முயற்சிகளுக்கு வட்டியில்லா கடன்கள் அல்லது மானியங்களை வழங்குவது, புதிய தொழில்களை உருவாக்கவும், உள்ளூர் பொருளாதாரத்தை உயர்த்தவும், வேலையின்மையை குறைக்கவும் உதவும். கொள்கைகள் மற்றும் சமூக முன்முயற்சிகள் மூலம் ஆதரவான சூழலை உருவாக்குவது, பயனாளிகளை தொழில் முனைவோர் நடவடிக்கைகளைத் தொடங்கவும் தொடரவும் ஊக்குவிக்கும்.

> "சில ஆண்டுகளுக்கு முன்பு கடுமையான வெள்ளத்தை அனுபவித்த பிறகு, நீர் கிணறுகளை சுத்தம் செய்வதற்கான நடமாடும் சேவையை நிறுவ ஒரு நீர்ப்பம்பி, குழாய்கள் மற்றும் பிற தேவையான உபகரணங்களை வாங்கினேன். காலப்போக்கில் நான் வியாபாரத்தை விருத்தி செய்தேன். இப்போது நிறுவனங்கள் உள்ளிட்ட வாடிக்கையாளர்களை கொண்டிருக்கின்றேன். அவர்கள் எனக்கு வருடம் முழுவதும் நிலையான வேலையை தருகின்றனர். நான் சில உதவியாளர்களையும் பணிக்கு அமர்த்தியுள்ளேன். எனது வியாபாரம் இப்போது கையடக்க தொலைபேசி மூலம் நிர்வகிக்கப்படுகின்றது"
>
> - காமினி (பெயர் மாற்றப்பட்டுள்ளது.), கம்பஹா, முன்னாள் சமுர்த்தி பெறுநர்

### 4. சமூக ஈடுபாடும் விழிப்புணர்வும்

*பொதுமக்கள் விழிப்புணர்வு செயற்திட்டங்களின் வகிபாகம்*

சமூக பாதுகாப்பு முயற்சிகளின் வெற்றிக்கு பொதுமக்கள் விழிப்புணர்வு செயற்திட்டங்கள் முக்கியமானவை. கிடைக்கக்கூடிய நலத்திட்டங்கள், தகுதித் தேவைகள் மற்றும் விண்ணப்ப நடைமுறைகள் குறித்து பொதுமக்களுக்குக் கற்பித்தல் பங்கேற்பை அதிகரிக்கவும், நன்மைகள் தேவைப்படுபவர்களை சென்றடைவதை உறுதி செய்யவும் முடியும்.

வானொலி, தொலைக்காட்சி, சமூக ஊடகங்கள் மற்றும் சமூகப் பரவலைப் பயன்படுத்தி தகவல் பிரச்சாரங்கள் நலத்திட்டங்கள் பற்றிய தகவல்களை திறம்பட பரப்ப முடியும். கூடுதலாக, இந்த விழிப்புணர்வு முயற்சிகளில் சமூகத் தலைவர்கள் மற்றும் உள்ளூர் அமைப்புகளை ஈடுபடுத்துவது அவர்களின் நம்பகத்தன்மையையும் செயற்திறனையும் அதிகரிக்கும்.

### *சமூக ஆதரவு கட்டமைப்புகளை உருவாக்குதல்*

வலுவான சமூக ஆதரவு கட்டமைப்புகளை உருவாக்குவது சமூக பாதுகாப்பு திட்டங்களின் செயற்திறன் மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்தலாம். சமூகம் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் என்பன, அரசாங்கத்திற்கும் பயனாளிகளுக்கும் இடையில் இடைத்தரகர்களாக செயற்பட முடியும். அவை பயன்பாடுகளுக்கு உதவுகின்றன, சேவைகளுக்கான அணுகலை எளிதாக்குகின்றன மற்றும் திட்டங்கள் எவ்வளவு சிறப்பாக செயற்படுத்தப்படுகின்றன என்பதைக் கண்காணிக்கின்றன. பல்வேறு சமூகக் குழுக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட உள்ளூர் நலக் குழுக்களை நிறுவுவது, உள்ளூர் தேவைகளை நிவர்த்தி செய்வதை உறுதி செய்கிறது. நலன்புரி திட்டங்களை வடிவமைத்து செயற்படுத்துவதில் சமூகங்களை ஈடுபடுத்துவது, உரிமை மற்றும் பொறுப்புணர்வை ஊக்குவித்து, சிறந்த பெறுபேறுகளுக்கு வழிவகுக்கும்.

இந்த உத்திகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலங்கையின் சமூக பாதுகாப்பு திட்டங்களின் செயற்திறன் மற்றும் தாக்கத்தை பெரிதும் மேம்படுத்த முடியும். தரவு-உந்துதல் முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம், நிர்வாக செயன்முறைகளை எளிதாக்குதல், பொருளாதார தன்னிறைவை ஊக்குவித்தல் மற்றும் சமூகங்களை உள்ளடக்கியதன் மூலம், பாதிக்கப்படக்கூடிய மக்களின் தேவைகளை அரசாங்கம் சிறப்பாக நிவர்த்தி செய்து, நீடித்த வறுமைக் குறைப்பை அடைய உதவுகிறது.

## 5. அரசாங்கத்தின் தற்போதைய சமுர்த்தி திட்டம்

### *அஸ்வெசும நலன்புரி வேலைத்திட்டத்தின் அறிமுகம் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மீதான தாக்கம்*

ஜூலை 2023இல் அஸ்வெசும நலன்புரி உதவித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம், நீண்டகாலமாக இருந்த சமுர்த்தி திட்டம் நிறுத்தப்பட்டது, இதன் விளைவாக சுமார் 18,000 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வேலை இழந்தனர். சமுர்த்தி தொழிற்சங்கங்களின் கூட்டு சம்மேளனம் இந்த அதிகாரிகள் தற்போது எதிர்நோக்கும் கடுமையான சவால்களை வலியுறுத்தியுள்ளது.

### *வரலாறு மற்றும் சமுர்த்தி வங்கியின் செயற்பாடுகள்*

1995ஆம் ஆண்டு முதல், சமுர்த்தி இயக்கம் இலங்கை முழுவதும் 1,097 சமுர்த்தி வங்கிகளை அமைத்து, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குவதில் முக்கிய பங்காற்றியது. இந்த வங்கிகள், சமுர்த்தி உதவி பெறுபவர்களிடமிருந்து கட்டாய சேமிப்பின் மூலம் நிதியளிக்கப்பட்டு, குறைந்த கட்டணத்தில் கடன்களை வழங்கியது மற்றும் வீட்டு லொட்டரிகள் உட்பட பல்வேறு நலன்புரி நடவடிக்கைகளை பேணியது.

### *கொவிட்-19 காலப்பகுதியில் ஏற்பட்ட நிதியியல் சவால்கள்*

கொவிட்-19 தொற்றுநோய்களின் போது, குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அவசரகால நிவாரணமாக 5000 ரூபாவை வழங்குவதற்காக சமுர்த்தி வங்கிகளில் இருந்து 47 பில்லியன் ரூபாவை அரசாங்கம் திரும்பப் பெற்றது. இந்தத் தொகை திருப்பிச் செலுத்தப்படாததால், இந்த வங்கிகள் எதிர்கொள்ளும் நிதிச் சவால்களை மோசமாக்கியது.

### *சமுர்த்தி உதவிகளை விநியோகித்தல்*

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களே பிரதானமாக ஒரு குடும்பத்திற்கு 350 ரூபாயிலிருந்து 3500 ரூபா வரையிலான உதவிகளை விநியோகித்தனர். இருப்பினும், ஒதுக்கப்பட்ட நிதியில் சுமார் 25% நிறுவனங்களை பராமரிக்கவும், அதிகாரிகளின் சம்பளம் வழங்கவும் பயன்படுத்தப்பட்டது.

### *உதவி விநியோக புள்ளிவிவரங்கள்*

2020ஆம் ஆண்டு செப்டெம்பர் 1ஆம் திகதியின் புள்ளிவிபரங்களின் படி, பின்வரும் வகைகளின் கீழ் 1,784,082 குடும்பங்கள் சமுர்த்தி உதவிகளை பெற்றுள்ளன.

| உதவித்தொகை | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| ரூ. 420.00 | 83,551 |
| ரூ. 1,500.00 | 636,445 |
| ரூ. 2,500.00 | 350,278 |
| ரூ. 3,500.00 | 713,808 |
| மொத்தம் | 1,784,082 |

மூலம் : பாராளுமன்ற இணையத்தளம்

## *அரசியல் செல்வாக்கு மற்றும் செயற்திட்டத்தின் பயனற்ற தன்மை*

2005 இல் 1,960,664 ஆக இருந்த பயனாளிகள் 2018 இல் 1,384,021 ஆகக் குறைக்கப்பட்ட போதிலும், 2019 இல் அந்த எண்ணிக்கை 1,784,082 ஆக அதிகரித்தது. நல்லாட்சி அரசாங்கத்தின் அரசியல் தெரிவுகளே இந்த எழுச்சிக்குக் காரணம். இந்த பயனாளிகளில் சுமார் 25% பேர் 2019 ஜனாதிபதித் தேர்தலின் போது அரசியல் ஆதரவாக உதவிகளைப் பெற்றனர்.

## *சீர்த்திருத்துவதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள்*

சமுர்த்தி வேலைத்திட்டத்தை அரசியலற்ற மற்றும் நெறிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட நலன்புரி நன்மைகள் வாரியச் சட்டம் 2002 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் 2022 இல் இருந்தே நடைமுறைக்கு வந்தது.

### **குறிப்புகள்**

"The Effectiveness of Aswesuma Welfare Benefit Scheme Preliminary Findings and Ongoing Assessments." *The Effectiveness of Aswesuma Welfare Benefit Scheme Preliminary Findings and Ongoing Assessments,* Right to Life Human Rights Centre, Nov. 2023.

LIRNEasia. *Social Safety Nets and the State of Poverty in Sri Lanka.* LIRNEasia, 2023.

அத்தியாயம் 7

# கொள்கைப் பரிந்துரைகள்

### 1. குறுகிய கால தலையீடுகள்

*உடனடி கொள்கை சரிப்படுத்தல்கள்*

இலங்கையின் சமூக பாதுகாப்பு வலைத் திட்டங்களில் உள்ள உடனடி சவால்களை சமாளிக்க, பல கொள்கை திருத்தங்கள் தேவைப்படுகின்றன. முதலாவதாக, பயனாளிகளை இலக்குவைக்கும்போது துல்லியத்தை மேம்படுத்துவது மிக முக்கியமானது. தரவு சேகரிப்பு முறைகளை மேம்படுத்துவதன் மூலமும், புதுப்பிக்கப்பட்ட சமூக-பொருளாதார குறிகாட்டிகளை இணைப்பதன் மூலமும் இதைச் செய்யலாம். விரைவான மதிப்பீட்டுக் கருவிகளைப் பயன்படுத்துவது மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களை விரைவாகக் கண்டறிய உதவும். கூடுதலாக, அதிகாரத்துவ தடைகளை குறைப்பதன் மூலம் விண்ணப்ப செயன்முறைகளை எளிதாக்குதல் மற்றும் விண்ணப்பதாரர்களுக்கான ஆதரவு சேவைகளை மேம்படுத்துதல் ஆகியவை நிரல்களை அணுகக்கூடியதாக மாற்றும். உதாரணமாக, தொலைதூரப் பகுதிகளுக்கு நடமாடும் தொகுதிகளை அனுப்புவது, பதிவுகள் மற்றும் விசாரணைகளுக்கு உதவலாம். இதன்மூலம், தளவாடச் சிக்கல்கள் காரணமாக தகுதியான நபர்களை விலக்கவில்லை என்பதை உறுதிப்படுத்த முடிகின்றது.

*ஏற்கனவே உள்ள திட்டங்களை மேம்படுத்துதல்*

தற்போதுள்ள சமூக பாதுகாப்பு வலைத் திட்டங்களை மேம்படுத்த, பல முக்கிய மேம்பாடுகள் அவசியமாகும். வழங்கப்பட்ட பலன்களை அதிகரிப்பது மற்றும் நிதியை சரியான நேரத்தில் வழங்குவதை உறுதி செய்வது முக்கியமான படிகளாகும். உதாரணமாக, அஸ்வெசும திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் மாதாந்திர பணப் பரிமாற்றங்கள், பணவீக்கம் மற்றும் உயரும் வாழ்க்கைச் செலவுகளைக் கணக்கில் கொண்டு தொடர்ந்து சரிசெய்யப்பட வேண்டும். கூடுதலாக, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு கட்டமைப்பை வலுப்படுத்துவது, தாமதங்கள் அல்லது ஊழல் இல்லாமல், நோக்கம் பெறுபவர்களுக்கு நன்மைகள் விநியோகிக்கப்படுவதை உறுதிசெய்ய உதவும். சுகாதாரம், கல்வி மற்றும் ஊட்டச்சத்து ஆதரவு போன்ற நிரப்பு சேவைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் வறுமை ஒழிப்புக்கான முழுமையான அணுகுமுறையை அடைய முடியும். உதாரணமாக, பணப் பரிமாற்றங்களை பாடசாலை உணவுத் திட்டங்கள் மற்றும் சுகாதார மானியங்களுடன் இணைப்பது பயனாளிகளின் ஒட்டுமொத்த நல்வாழ்வை கணிசமாக மேம்படுத்தும். இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறை உடனடி நிதித் தேவைகளை நிவர்த்தி செய்வது மட்டுமல்லாமல், வாழ்க்கைத் தரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தின் பரந்த அம்சங்களை ஆதரிக்கிறது.

### 2. நீண்ட கால சீர்திருத்தங்கள்

*விரிவான கொள்கை மறுசீரமைப்பு*

நீண்ட காலமாக, வலுவான மற்றும் நிலையான சமூக நல அமைப்பை உருவாக்க கொள்கைகளில் முழுமையான சீர்திருத்தம் தேவை. திறமையின்மை மற்றும் இடைவெளிகளை சரிசெய்வதற்கு தற்போதைய கொள்கைகளை மதிப்பாய்வு செய்து புதுப்பிப்பதை இது குறிக்கிறது. ஒரு மத்திய கட்டமைப்பின் கீழ் பல்வேறு நலத்திட்டங்களை ஒன்றிணைப்பதன் மூலம் ஒருங்கிணைப்பை மேம்படுத்தலாம் மற்றும் ஒரேமாதிரியான சேவைகளை வழங்குவதை குறைக்கலாம். சமத்துவமின்மையைக் குறைப்பதிலும் நேர்மையை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தும் கொள்கைகளை அறிமுகப்படுத்துவது முக்கியம். இந்தக் கொள்கைகள் அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும், சிறுபான்மையினர், பெண்கள் மற்றும் இயலாமையுடையோர் போன்ற ஓரங்கட்டப்பட்ட குழுக்கள் சரியான முறையில் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதையும் ஆதரிக்கிறது என்பதையும் இக்கொள்கைகள் உறுதிப்படுத்த வேண்டும். (LIRNEasia 36-45).

*பரந்த பொருளாதார கொள்கைகளுடன் நல்வாழ்வாழ்வை ஒருங்கிணைத்தல்*

வலுவான தாக்கத்தை உருவாக்குவதற்கு, பொருளாதார அபிவிருத்திக்கு உதவவும்,சமூகத்தில் நேர்மையை மேம்படுத்துவதற்கும் சமூக நலத் திட்டங்கள் பரந்த பொருளாதாரக் கொள்கைகளுடன் இணைக்கப்பட வேண்டும். இந்தத் திட்டங்களை தேசியப் பொருளாதார இலக்குகளுடன் சீரமைப்பது அவை ஒட்டுமொத்த ஸ்திரத்தன்மை

மற்றும் வளர்ச்சியை ஆதரிப்பதை உறுதி செய்கிறது. உதாரணமாக, தொழில் உருவாக்கம், திறன் பயிற்சி மற்றும் தொழில்முனைவோர் முயற்சிகள் ஆகியவற்றுடன் நல்வாழ்வை இணைப்பது பயனாளிகள் நிதி ரீதியாக சுதந்திரமாக இருக்க உதவும். அரசு மற்றும் தனியார் துறைக்கு இடையிலான கூட்டாண்மைகளை ஊக்குவிப்பது கூடுதல் வளங்களையும் அறிவையும் பெற்றுக்கொள்ள முடியும். இது நலன்புரி முயற்சிகளின் செயற்திறனையும் அவற்றை அடையும் திறனையும் மேம்படுத்துகிறது.

### 3. அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் வகிபாகம்

*திறன்மிக்க ஒத்துழைப்பும் கூட்டாண்மையும்*

சமூக பாதுகாப்பு திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு அரச மற்றும் அரச சாரா நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு முக்கியமானது. தேவையுள்ளோரை கண்டறியவும், சேவைகளை வழங்கவும், இந்தத் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் அரச சாரா நிறுவனங்கள் உதவும். அரச சாரா நிறுவனங்களுடன் உத்தியோகபூர்வ கூட்டாண்மைகளை உருவாக்குவது நலன்புரி திட்டங்களின் வரம்பையும் செயற்திறனையும் விரிவுபடுத்தும். உதாரணமாக, வலுவான உள்ளூர் இணைப்புகளைக் கொண்ட அரசு சாரா நிறுவனங்கள் சிறந்த நிபுணத்துவத்தை வழங்கலாம் மற்றும் சமூகங்களை ஈடுபடுத்த உதவலாம், திட்டங்கள் வெவ்வேறு குழுக்களின் தனிப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்வதை உறுதி செய்கின்றன. அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்கிடையேயான தொடர்பாடல் மற்றும் ஒருங்கிணைப்பு ஒரு கூட்டுறவு சூழலை உருவாக்கி, சமூக நல முயற்சிகளை மிகவும் பயனுள்ளதாகவும் பதிலளிக்கக்கூடியதாகவும் மாற்றும்.

*வெற்றிகரமான முன்முயற்சிகள் குறித்த நிகழ்வு ஆய்வுகள்*

வெற்றிகரமான முன்முயற்சிகள் குறித்த நிகழ்வு ஆய்வுகளை மதிப்பிடுவதன் மூலம், இலங்கை மீண்டும் செயற்படுத்தக்கூடிய அல்லது மாற்றியமைக்கக்கூடிய முக்கியமான விடயங்களையும் சிறந்த நடைமுறைகளையும் வழங்க முடியும். உதாரணமாக, பிரேசிலின் போல்சா ∴பெமிலியா திட்டம், பணப் பரிமாற்றங்களை சுகாதாரம் மற்றும் கல்வி நிலைமைகளுடன் இணைக்கிறது, இது வறுமையை திறம்பட குறைத்து சமூக விளைவுகளை மேம்படுத்தியுள்ளது. அதேபோல், இந்தியாவின் தேசிய கிராமிய தொழில் உறுதிச் சட்டம் கிராமப்புற குடும்பங்களுக்கு 100 நாட்கள் உத்தரவாத வேலை வழங்கும், நீடித்த உள்கட்டமைப்பை உருவாக்கும் அதே வேளையில் கிராமப்புற வறுமையைக் குறைப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளது. இந்த வெற்றிகரமான மாதிரிகளில் இருந்து கற்றுக்கொள்வதன் மூலம், இலங்கை தனது சூழலுக்கு ஏற்ற மூலோபாயங்களை பின்பற்றலாம் மற்றும் அதன் சமூக பாதுகாப்புத் திட்டங்களை வலுப்படுத்த இதுபோன்ற திட்டங்களை செயற்படுத்தலாம். (LIRNEasia 36-45).

இந்தக் கொள்கைப் பரிந்துரைகளை மேற்கொள்வதன் மூலம் இலங்கையின் சமூக நலன்புரி கட்டமைப்பைப் பெரிதும் மேம்படுத்த முடியும், மேலும் அதை மிகவும் திறமையானதாகவும், நியாயமானதாகவும், நிலையானதாகவும் மாற்ற முடியும். உடனடி சவால்கள் மற்றும் ஆழமான கட்டமைப்பு சிக்கல்கள் இரண்டையும் கையாள்வதன் மூலம், சமூக பாதுகாப்புத் திட்டங்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு அர்த்தமுள்ள ஆதரவை வழங்குவதை உறுதிசெய்யும் அதே வேளையில் பரந்த சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிக்கின்றது.

### குறிப்புகள்

"The Effectiveness of Aswesuma Welfare Benefit Scheme Preliminary Findings and Ongoing Assessments." *The Effectiveness of Aswesuma Welfare Benefit Scheme Preliminary Findings and Ongoing Assessments,* Right to Life Human Rights Centre, Nov. 2023.

LIRNEasia. *Social Safety Nets and the State of Poverty in Sri Lanka.* LIRNEasia, 2023.

## Right to Life Human Rights Centre

No. 56/2, Palitha Place, Colombo 09, Sri Lanka.

Tel/Fax: +94 112 669100

Email: right2lifelk@gmail.com

Websites: www.right2lifelanka.org www.aithiya.lk www.dailyreporter.lk www.slcat.org

Facebook pages: Right to Life Sri Lanka | Aithiya | Daily Reporter

Youtube: Aithiya Media